ஜூலை 2007 JULY | இதழ் 198 ISSUE

# தமிழர் தகவல்
## TAMILS' INFORMATION











Growing with the Community ESTD-1991

இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி
a monthly information digest

17 வது ஆண்டில் th Year

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION
ISSN 1206-0585

ஸ்தாபிதம்
பெப்ரவரி 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

தொலைபேசி
416 920 9250
தொலைநகல்
416 921 6576

மின்னஞ்சல்
tamilsinfo@sympatico.ca

தயாரிப்பு
ஈழத்தமிழர் தகவல் நிலையம்,
ரொறன்ரோ &
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

வெளியீடு
அகிலன் அசோஷியேற்ஸ்

முதன்மை ஆசிரியர்
திரு எஸ். திருச்செல்வம்

இணை ஆசிரியர்
ரஞ்சி திரு

உதவி ஆசிரியர் &
தயாரிப்பு முகாமையாளர்
சசி பத்மநாதன்

உதவி ஆசிரியர்கள்
அன்ரன் கனகசூரியர்
குயின்ரஸ் துரைசிங்கம்

பொது முகாமையாளர்
எஸ். ரி. சிங்கம்

விநியோக முகாமையாளர்
ஆர். ஆர். ராஜ்குமார்

பொதுமக்கள் தொடர்பு
இ. சிவலிங்கம்
எஸ். திருமுருகா
ப. சிவசுப்பிரமணியம்
பொன். சிவகுமாரன்
என். குமாரதாஸன்
நா. விமலநாதன்

தொழில்நுட்ப உதவி
ஹரன் கிராஃப்

மாதாந்தம்
5000 பிரதிகள்

ஆண்டு மலர்
6000 பிரதிகள்

## ஆசிரியரிடமிருந்து — From the Editor

வெல்க தமிழ், தமிழியல் மாநாடு, தமிழ்மொழிக் கிழமை (வாரம்). இவை மூன்றும் கடந்த மாதம் ரொறன்ரோ நகரில் தமிழின் பெயரால் இடம்பெற்ற முக்கிய நிகழ்வுகள்; தேவையானவையும் கூட. புலம்பெயர்ந்த தமிழர்களின் தலைநகரமாக மதிக்கப்படும் ரொறன்ரோவில், முக்கியமான இவ்வகை நிகழ்வுகள் நடைபெறுவது மனநிறைவைத் தருவது. வெல்க தமிழ் நிகழ்வு வெற்றித் தமிழ் நிகழ்வாக, சதுக்கம் நிறைந்த மக்களின் உற்சாக அலையில் பெருமிதம் பெற்று முழக்கம் கண்டது. கனடிய அரசியலரங்கின் மூன்று மட்ட அரசாங்கங்களின் பிரதான மூன்று கட்சிப் பிரதிநிதிகளும் இதில் பங்கேற்று, இலங்கையில் சிறிலங்கா அரசாங்கம் நடத்தும் தொடர்ச்சியான மனித உரிமை மீறல்களைக் கண்டித்து உரையாற்றினர். ஒன்ராறியோ புதிய ஜனநாயகக் கட்சி (என். டி. பி) யின் தலைவர் ஹொவார்ட் ஹாம்ப்டன் இவர்களுள் பெயர் குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டியவர். இங்குள்ள தமிழர் சங்கங்கள், பாடசாலைகள் மற்றும் ஊர்ச் சங்கங்கள், விளையாட்டுக் கழகங்கள், இளையோர் அமைப்புகள், மாணவர் மன்றங்கள் ஆகிய அனைத்தும் ஒன்றிணைந்து பங்காளராகி வெல்க தமிழை இன்னொரு பொங்கு தமிழாக்கி, வரலாற்றில் பதித்துள்ளனர். தமிழியல் மகாநாடு இரண்டு தினங்கள் ரொறன்ரோ பல்கலைக் கழகத்தின் வெவ்வேறு அரங்குகளில் இடம்பெற்றது. இதன் முதல் மகாநாடு கடந்த ஆண்டில் இதே பல்கலைக் கழகத்தில் இதே காலப்பகுதியில் நடைபெற்றது. இவ்வருட மகாநாடு கடந்தாண்டினை விடச் சற்று ‘அகல’ப்படுத்தப்பட்டதாக ஏற்பாட்டாளர்களால் அமைக்கப்பட்டிருந்தது. வடஅமெரிக்கா, இந்தியா, ஆஸ்திரேலியா, இலங்கை ஆகிய நாடுகளிலிருந்து தமிழியல் சார்ந்த பலர் இதில் பங்கேற்றிருந்தனர். கணிசமான தொகை இளையோரும் உயர்கல்வி மாணவர்களும் தொண்டர்களாகப் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது. அடுத்துவரும் மகாநாடுகளில் இவர்கள் அமர்வுகளில் பங்காளர்களாக வேண்டும். அதுவே இலக்காக அமைய வேண்டும். அத்துடன், தமிழில் கூடிய அமர்வுகள் இடம்பெற வேண்டுமென்பதும் (இம்முறை ஒரு அமர்வு தமிழில் இடம்பெற்றது), இலங்கையிலிருந்து கூடிய எண்ணிக்கையில் தமிழ்த்துறையினர் பங்கேற்பது உறுதி செய்யப்பட வேண்டும் என்பதும் எமது கருத்து. கடந்த மாதம் நடை-பெற்ற தமிழியல் மகாநாடு பற்றி கனடாவிலுள்ள பல முக்கியமானவர்கள் அறியாமலிருந்ததும், இந்த மகாநாட்டுக்கு கனடியத் தமிழ் ஊடகங்கள் உரிய இடமளிக்காததும், யாருடைய தவறு என்ற கேள்வியை எழுப்பி நிற்கின்றது. பல்வேறு நெருக்குதல்களுக்கு மத்தியிலும் இந்த மகாநாட்டைத் திட்டமிட்டபடி ஒழுங்காக நடத்திய ஏற்பாட்டாளர்களும் தன்னார்வத் தொண்டர்களும் உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டியவர்கள். தமிழ்மொழிக் கிழமை நிகழ்வு கடந்த மாதத்தின் கடைசி ஏழு நாட்களும், ரொறன்ரோ பெருநகரின் வெவ்வேறு பட்டணங்களில் இடம்பெற்றது. 2005ம் ஆண்டு பல்வேறு வேலைத் திட்டங்களுடன், சமூகப் பிரதிநிதிகளைக் கொண்ட குழுவின் ஊடாக இது முன்னெடுக்கப்பட்டது. ஆனால் இம்முறை அது பாதை தவறி, இலக்கு மாறிச் சென்றதானது பலருக்கும் கவலையை அளித்துள்ளது. எந்த நோக்கத்துக்காக தமிழ்மொழிக் கிழமை ஆரம்பிக்கப்பட்டதோ அது மறக்கப்பட்டு, ஒரு கலை விழாவாக மாற்றம் பெற்றது ஏன் என்று தெரியவில்லை. ஏழு நாட்களும் ஏழு தலைப்புகளில் இந்நிகழ்வு இடம்பெற வெண்டும் ஆனால் இம்முறை, ஒரே தலைப்பில் ஒருவரே இரண்டு இடங்களில் உரையாற்றியது பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலை தொடருமானால், தமிழ்மொழிக் கிழமை என்பது எதிர்காலத்தில் தேவைதானா என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாததாகும். எனவே, தமிழ்க்கலை தொழில் நுட்பக் கல்லூரியின் தலைமை நிர்வாகிகள் உடனடியாக இவ்விடயத்தில் தலையிட்டு, வருங்காலத்தில் இந்நிகழ்வு எண்ணிய பயன்தரு வகையில் நடைபெற ஒழுங்குகளைச் செய்ய வேண்டுமென்று அனைவரும் வேண்டுகின்றனர். இப்போது கோடை விடுமுறை ஆரம்பமாகிவிட்டது. பலவேறு நிகழ்ச்சிகள், வைபவங்கள் ஜுலை, ஆகஸ்ட் மாதங்களில் நடைபெறப் போகின்றது. ஒன்றுகூடல்கள், விளையாட்டுப் போட்டிகளுன் போட்டி அடிப்படையில் இடம்பெறும். தென்னிந்திய கனவுலக தொழிற்சாலையின் ‘உற்பத்தி’களும் வர ஆரம்பித்துவிட்டன. பனியிலும் வெயிலிலும் மாடாய் உழைத்து ஓடாய்த் தேயும் புகலிடத் தமிழனின் டாலர்களை உறிஞ்சும் மூட்டைப் பூச்சிகள் இவர்கள். அறிவு செறிந்த மக்கள் இவ்விடயத்தில் தங்கள் புத்தியைச் சரியாக தீட்டிக் கொண்டால், தங்கள் பணத்தைக் காப்பாற்றிக் கொள்ள முடியும். இனிமேல் இவர்கள் வருகையை நிறுத்தவும் இதுவே வழிவகுக்கும். சிந்தித்துச் செயற்பட்டால், எல்லாம் நலமே!

**திரு எஸ். திருச்செல்வம்**

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION
ISSN 1206-0585

Established
February 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

Tel: 416 920 9250
Fax: 416 921 6576

email
tamilsinfo@sympatico.ca

Produced by
Eelam Thamil Information
Centre (ETHIC) of Toronto &
Thamil Information
Research Unit (THIRU)

Published by
Ahilan Associates

Editor in chief
Thiru S. Thiruchelvam

Associate Editor
Ranji Thiru

Assistant Editor and
Production Manager
Sasi Pathmanathan

Assistant Editors
Anton Kanagasooriyar
Quintus Thuraisingam

General Manager
S.T. Singam

Circulation Manager
R. R. Rajkumar

Public Relation
R. Sivalingam
S. Thirumuruga
P. Sivasubramaniam
Pon. Sivakumaran
N. Kumaradasan
N.Vimalanathan

Technical Support
Haran Graph

Monthly
5000 Copies

Annual
6000 Copies

## ஒன்ராறியோ விகிதாசார முறைத் தேர்தல் கருத்துக் கணிப்பு வினாக்கொத்து தயார்

அக்டோபர் பத்தாம் திகதியன்று இடம்பெறவுள்ள ஒன்ராறியோ மாகாண சபைத் தேர்தலுடன் இணைந்ததாக விகிதாசார முறைத் தேர்தலை அறிமுகம் செய்வதற்கான கருத்துக் கணிப்பையும் நடத்த ஏற்பாடாகி வருகின்றது.

இதற்கெனக் கடந்தாண்டில் நியமிக்கப்பட்ட பிரஜைகள் சபை செய்த ஏகோபித்த பரிந்துரையின் அடிப்படையில் கருத்துக் கணிப்புக்கான வினாக்கொத்து ஒன்றினை அதற்குப் பொறுப்பான அமைச்சு தயாரித்துள்ளது.

கருத்துக் கணிப்புக்கான வாக்களிப்பு தனியான வாக்குச் சீட்டு ஒன்றில் நடத்தப்படும்.

மாகாணம் முழுவதும் வாக்களிப்பவர்களில் அறுபது வீதமான-வர்கள் இதற்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டும். இங்குள்ள 103 தொகுதிகளில் ஆகக்குறைந்தது 64 தொகுதிகளில் 50 வீதத்துக்கும் அதிகமான வாக்குகள் இதற்குக் கிடைக்க வேண்டும்.

கருத்துக் கணிப்பு வெற்றி பெறுமானால், 90 உறுப்பினர்கள் தொகுதி அடிப்படையில் நேரடித் தேர்தலில், அதாவது தற்போதைய முறையில் தெரிவு செய்யப்படுவர்.

மேலும் 39 உறுப்பினர்கள் ஒவ்வொரு கட்சிக்கும் கிடைக்கும் செல்வாக்கு வாக்குகளின் (popular vores) அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர். இந்த 39 உறுப்பினர் தெரிவும் தற்போது இலங்கையில் நடைமுறையிலிருக்கும் உறுப்பினர் தெரிவு முறையை ஒத்தது.

இதனடிப்படையில், பசுமைக் கட்சி (Green Party) மாகாண சபையில் உறுப்பினரைப் பெறும் வாய்ப்புண்டு.

எந்தவொரு அரசியற் கட்சியாவது மொத்த வாக்குகளில் மூன்று (3) வீதத்துக்கும் குறைவான வாக்குகளைப் பெறுமாயின் அது ஒரு உறுப்பினரையும் பெறமாட்டாது.

## அங்கீகாரமற்ற குடிவரவு ஆலோசகர்கள் உங்களை ஏமாற்றலாம் - கவனம்!

## Ghost Immigration Consultants - Beware

கனடாவில் அங்கீகாரம் பெறாத குடிவரவு ஆலோசகர்கள் பற்றிப் பொதுமக்கள் விழிப்பாக இருக்குமாறு வேண்டப்படுகின்றனர். குடிவரவு ஆலோசகர்களுக்கான கனடிய சபை (Canadian Society of Immigration consult-ants - CSIC) இந்த வேண்டுகோளைப் பகிரங்கமாக விடுத்துள்ளது.

சில குடிவரவு ஆலோசகர்கள் சட்டத்துக்குப் புறம்பான வகையிலும், தங்கள் தொழில் விதிமுறைகளுக்கு முரண்பாடான வகையிலும் நடந்து கொண்ட விபரங்களை ரொறன்ரோ ஸ்டார் பத்திரிகை ஜூன் 16ம் 17ம் 18ம் திகதிகளில் தொடர்ச்சியாகக் கட்டுரை வடிவில் அம்பலப்படுத்தியிருந்தது,

விசாவில் வந்த சிலரை அகதிக் கோரிக்கைக்குத் தூண்டியது, அவர்களுக்கான 'கதை'களை ஜோடனை செய்து கொடுத்தது, லான்டட் பெறுவதற்கு 'வசதியான' திருமண ஆலோசனைகளை வழங்கியது போன்ற பல விடயங்கள் இக்கட்டுரைகள் ஊடாக அம்பலத்துக்கு வந்தன. இதனைத் தொடர்ந்து மேற்படி சபை தனது விசாரணைகளை ஆரம்பித்தது.

இது தொடர்பாக மேற்படி சபையின் நிறைவேற்று இயக்குனர் Ross Eastley தமிழர் தகவலுடன் தொடர்பு கொண்டு பின்வரும் விடயங்களைத் தமிழ் மக்களின் கவனத்துக்கு கொண்டு வருமாறு கேட்டு, எழுத்து மூலம் அனுப்பி வைத்துள்ளார்.

ரொறன்ரோ ஸ்டார் பத்திரிகைக் கட்டுரையின் பிரகாரம், மேற்படி சபையில் பதிவு செய்த இரண்டு உறுப்பினர்கள் உட்பட பல தனியார் தங்களிடம் சேவை பெறுபவர்களைப் பொய் கூறத் தூண்டி, அவர்களைத் தொடர்ந்து கனடாவில் தங்க வைக்க முனைந்துள்ளனர். இது சம்பந்தமாக விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதில் அவர்கள் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து, அவர்களது உறுப்பினர் உரிமை நீக்கப்படும்.

கனடாவில் வழக்கறிஞராக/சட்டத்தரணியாக பட்டம் பெறாத தனியாட்கள், குடிவரவு ஆலோசகர்களாகப் பணியாற்றுவதற்கான விதிமுறைகளைக் கனடிய அரசு மூன்றாண்டுகளுக்கு முன்னர் நடைமுறைக்குக் கொண்டு வந்தது.

இதன் பிரகாரம், CSIC சபையில் பதிவு செய்து அங்கீகாரம் பெற்றவர்கள் மட்டுமே குடிவரவு ஆலோசகர்களாகக் கடமை புரிய முடியும். தற்போது கனடா முழுவதும் சுமார் 1069 பேர் அங்கீகாரம் பெற்ற குடிவரவு ஆலோசகர்களாகக் கடமையாற்றுகின்றனர் என்று மேற்படி சபையின் தலைவர் John Ryan அறிவித்துள்ளார்.

பொதுமக்கள் எவரிடமாவது சேவையைப் பெறப் போகுமுன்னர் அவர் அங்கீகரிக்கப்பட்ட குடிவரவு ஆலோசகரா என்பதை உறுதிப்படுத்த வேண்டும். இந்தப் பூரண பட்டியலை www. CSIC-SCCI.ca என்ற இணையத்தளத்தில் சென்று பார்வையிடலாம். இந்தப் பட்டியலின்படி ரொறன்ரோவில் 239, ஸ்காபரோவில் 37, மிசிசாகாவில் 69, நோர்த்யோர்க்கில் 28 என்ற எண்ணிக்கையில் அங்கீகரிக்கப்பட்ட ஆலோசகர்கள் உள்ளனர். இதில் பத்துக்கும் (10) குறைவான தமிழ்ப் பெயர்களே காணப்படுகின்றன.

பதிவுக்கு விண்ணப்பித்து நிராகரிக்கப்பட்டவர்கள், பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவர்கள் பெயர்களும் இணையத் தளத்தில் இடம்பெற்றுள்ளன.

எனவே, குடிவரவாளர்களாக வருபவர்களும் விசாவில் வருபவர்களும் அகதிக் கோரிக்கையாளர்களும் போலிகளிடம் ஏமா-றாமல் இருக்க வேண்டியது அவசியம். கனடிய வழக்கறிஞர்கள/சட்டத்தரணிகளிடம் மொழிபெயர்ப்பாளர்களாகக் கடமையாற்றுபவர்கள் அங்கீகரிக்கப்பட்ட குடிவரவு ஆலோசகர்களாக இருப்பதாகச் சொன்னால், முதலில் மேலுள்ள இணையத் தளத்துக்குச் சென்று பார்வையிடுங்கள்.

அல்லது கட்டணம் செலுத்தாத 1 866 308 இணைப்பு 2236 அல்லது 416 572 2800 இணைப்பு 2236 இலக்கத்துடன் தொடர்பு கொண்டு விபரங்களைத் தெரிவித்து உண்மையை அறியலாம்.

குடிவரவு ஆலோசகர்களாக அங்கீகாரம் பெறாதவர்களின் விளம்பரங்களைப் பயன்படுத்த வேண்டாம் என்றும் மேற்படி சபை ஊடகங்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.



எஸ்தி



ஷியாமளா நவம்

# ஹோமியோபதி என்றால் என்ன?

இயற்கை வைத்திய முறைகளில் ஒன்றான ஹோமியோபதி மருத்துவ முறையானது உலகெங்கனும் 2வது இடத்தை வகிக்கின்றது. அது வட அமெரிக்காவிலும் இருந்து வந்துள்ளது. தற்போது பிரிட்டிஷ் கொலம்பியா, கியூபெக், மனிரோபா போன்ற மாகாணங்களிலும் நடைமுறையிலுள்ளது. சட்டமூலம் 171 வழியாக ஒன்ராறியோ மாகாணம் இழந்ததை மீண்டும் பெறக்கூடிய வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்த எமது அரசியல் தலைவர்களுக்கும் ஏனையோருக்கும் நன்றி.

**ஹோமியோபதி என்றால் என்ன?**

ஹோமியோபதி என்னும் மருத்துவ முறை இயற்கைத் தீர்வுகளைப் பாவித்து உடலின் நோய் தீர்க்கும் சக்தியைத் தூண்டுவதாகும். இத்தீர்வுகள் தாவரம், மிருகங்கள், மற்றும் கனிமங்களிலிருந்து பெறப்படுகின்றன. இவற்றை மிகவும் விசேடமான முறையில் மீண்டும் மீண்டும் ஐதாக்கி, குலுக்கி, கலந்து தயார் செய்யப்படுவதே இதன் சிறப்பம்சமாகும். இந்த முறையினால் அப்பொருட்களின் இரசாயன இயல்புகள் அகற்றப்பட்டு அவற்றின் ஆழ்ந்த குணப்படுத்தும் இயல்பு வெளிக்கொணரப்படுவதுடன் அவை மிகவும் பாதுகாப்பானவையாகவும் இரசாயன நச்சற்ற தன்மையையும் அடைகின்றன. இந்த ஒழுங்குமுறையானதும் கணக்கீட்டின் படி மருந்தினைத் தயார்செய்யும் முறையும் இற்றைக்கு 211 வருடங்களின் முன் ஒரு ஜேர்மானிய வைத்தியர் சாமுவேல் ஹனிமான் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டது.

ஆரோக்கியம், நோயுறல் மற்றும் குணமடைதல் என்பவற்றின் தத்துவம் உடலுக்குள் தானே ஒழுங்குசெய் சக்தி காணப்படுதலையும் அடிப்படையாகக் கொண்டது. நோய் என்பது இச்சக்தி பற்றீரியா, வைரஸ், சுற்றுச்சூழல், மருத்துவ நச்சு, தீவிரமான காலநிலை, மன அழுத்தம் போன்ற வெளிப்புறக் காரணிகளால் பாதிக்கப்பட்டு தன் இயக்க சக்தியை இழந்து விடுவதனால் ஏற்படுகின்றது. உடலின் தானே குணப்படுத்தும் முயற்சியை நோய் அறிகுறிகள் வெளிக்காட்டுகின்றன. இச்சக்தியினை மீண்டும் தொழிற்பட வைக்கும் தூண்டல்களை விசேட முறைப்படி சக்தியூட்டப்பட்டுத் தயார்படுத்திய மருந்துகளால் ஏற்படுத்தி நோயைக் குணமாக்குவதுதான் ஹோமியோபதி மருத்துவ முறையின் நோக்கமாகும்.

**என்ன வகையான நோய்களுக்கு ஹோமியோபதி மூலம் சிகிச்சை செய்ய முடியும்?**

ஹோமியோபதி வைத்திய முறை மூலம் தீவிர, தொற்றும், நீண்டகால மற்றும் சத்திர சிகிச்சை தவிர்க்கப்பட முடியாதது போன்ற பல வகைப்பட்ட நோய்களையும் குணமாக்க முடியும். மூக்கு, தொண்டை, கண்கள், ரொன்சில்ஸ், முதுகெலும்பு, சமிபாட்டுத் தொகுதி, சிறுநீரகங்கள், பித்தப்பை, ப்றொஸ்ரேற் ஆண்சுரப்பி, பெண் இனப்பெருக்க உறுப்புக்கள் போன்ற பல உறுப்புக்களினது சத்திர சிகிச்சைகளைத் தவிர்த்துக் குணமாக்க இம்மருத்துவ முறை உதவியுள்ளது. புற்றுநோய், மூட்டுவாதம், மைக்கரேயின் தலையிடி, ஒவ்வாமைகளும் நன்கு குணப்படுத்தப்படுகின்றன. மொத்தத்தில் மீட்கப்பட முடியாத நோய்நிலைக்குப் போகாத எந்த நோய்நிலைக்கும் ஹோமியோபதியினால் சிகிச்சையளிக்க முடியும்.

**ஹோமியோபதி மருந்துகள் பக்க விளைவுகளைக் கொண்டனவா?**

தனித்த ஹோமியோபதி மருந்துகள் மருத்துவரால் சிபாரிசு செய்யப்பட்டு எடுக்கும் போது நீண்ட நாட்களுக்கு எடுக்கப்பட்டாலும் கூட 100 சதவீதம் பாதுகாப்பானவை. நம்பகரமான ஆராய்ச்சிகள் இல்லாதபடியால் இதே கூற்றை நாம் கலவைகள், சேர்க்கைகள், எண்களுள்ள ஹோமியோபதி மருந்துகளுக்குக் கூற முடியாதுள்ளது. தயாரிப்பாளர்கள் கூறும் உறுதிப்பாடுகளையும் வழங்க முடியாதுள்ளதால் சிறந்த ஹோமியோபதி மருத்துவர்கள் பல கூறுகளைக் கொண்ட கலவைகளைத் தவிர்த்துக் கொள்வர்.

**ஹோமியோபதி மருந்துகள் ஏன் மிக மெதுவாகத் தொழிற்படுகின்றன?**

ஹோமியோபதி மருந்துகள் மிக மெதுவாகத் தொழிற்படுவது இல்லை! ஒரு ஹோமியோபதி வைத்தியரிடம் எவ்வகையான நிலையிலுள்ளவர்கள் வருகிறார்கள் எனச் சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். நீண்டகால, பலவிதமான பாரம்பரிய வைத்திய முறைகளால் குணம் பெறாதவர்கள், அதிகூடியளவிற்கு மருந்துகளைப் பாவித்தவர்கள் மற்றும் குணப்படுத்த முடியாது எனக் கூறப்பட்டவர்கள். சில மாதங்கள் தன்னும் எடுத்து குணத்தையோ ஒரு நீண்ட கால நிம்மதியையோ வழங்கும் ஹோமியோபதி மருத்துவத்தின் மெதுவான தொழிற்பாடு என இதனைக் கருதுவது நியாயமல்ல. உடனடியான தற்காலிக தீர்வுக்கும் குணப்படுதல் என்னும் நிரந்தரமான நோய் அகலுதலுக்குமிடையே வித்தியாசமுண்டு. ஹோமியோபதி வைத்திய முறை அறிகுறிகளை அடக்கி அல்லது மறைத்து உடனடித் தீர்வொன்றினை வழங்க எத்தனிப்பதில்லை. அடிப்படையான காரணத்தை அறிந்து அதன் மூலம் நோயை முடிந்தளவில் குணப்படுத்துகின்றது.

**ஹோமியோபதி மருத்துவம் 'எல்லாவற்றையும்' குணப்படுத்தும் வைத்தியமா?**

இல்லை. வேறு எந்த மருத்துவ முறையையும் விட அநேக தீவிர நோய்களைக் குறைந்தளவு காலத்தில் ஹோமியோபதி குணப்படுத்தவல்லது. பல நீண்டகால நோய்களுக்கும் மிகச் சிறப்பானது. அறுவை சிகிச்சை தேவைப்படும் பல நிலைமைகளைப் பாதுகாப்பாகக் குணப்படுத்தவல்லது. ஆனால், வேறு எந்த விஞ்ஞானத்தையும் போலவே இதற்கும் எல்லைப்பாடுகள் உள்ளன. இழையங்களில் அதி தீவிர மாற்றங்கள் ஏற்பட்டிருப்பின் இம்மருத்துவம் பதிலளிக்காத போதிலும் தற்காலிக தீர்வை அச்சந்தர்ப்பங்களில் பெற முடியும்.

**ஒரு ஹோமியோபதி மருத்துவரை நான் சந்திக்கப் போகையில் என்னத்தை எதிர்பார்க்கலாம்?**

ஹோமியோபதி தனிப்பட்டவர் வகையினதான ஒரு சிகிச்சையாதலால் நோயாளி ஒருவரிடமிருந்து நோயைப் பற்றி மட்டுமல்லாது அவர் பற்றிய முழு விபரங்களையும் அறிய விரும்புவார். உங்கள் குண இயல்புகள், உங்கள் விருப்பு வெறுப்புகள், கால நிலைக்கானதும் மன அழுத்தத்திற்கானதுமான எதிர்த் தாக்கங்கள், உங்கள் ஒரு முழுநாளைய ஒழுங்குமுறைகள் போன்ற சகலதையும் அறிந்து கொள்ள விரும்பிக் கேள்விகள் கேட்பார். உங்களையும் உங்கள் நோய் பற்றியும் அறியும் இந்த நேர்முகம் தொடர்பற்றது போலவும் உங்களுக்குக் குழப்பமாயும் இருப்பதுடன் 20 நிமிடங்களுக்கு மேலும் எடுக்கலாம்.

**தனக்குத் தானே வைத்தியம் செய்வதிலுள்ள அபாயங்கள்**

* பிழையான மருந்தின் தேர்வு எந்த நன்மையையும் தராது போக இவ்வைத்தியம் வேலை செய்யவில்லை என்று தோன்ற வைக்கும்.
* சரியான மருந்தை பிழையான செறிவுகளில் எடுப்பதன் மூலம் மருந்தினை மாற்ற வேண்டி அல்லது ஹோமியோபதி வேலை செய்யவில்லை என்ற எண்ணத்தைத் தோற்றுவிக்கும்.
* சரியான மருந்தைச் சரியான செறிவுகளில் ஆனால் பிழையான முறையில் எடுப்பது போதியளவில் இல்லாது அல்லது அதிகமாக இருக்கும்.
* அதிகூடிய அளவுகளில் எடுத்தல் அதிகூடிய விரைவில் குணமடைய முற்படல்

(26ம் பக்கம் வருக)

## கனடியத் தமிழர் வாழ்வு

# ஒன்றாறியோ மாகாணத் தேர்தலில் எத்தனை தமிழ் அபேட்சகர்கள்?

ஒன்றாறியோ மாகாண சபைக்கான தேர்தல் எதிரபார்க்கப்பட்டதற்கு முன்னராகவே சூடு பிடிக்க ஆரம்பித்துவிட்டது.அக்டோபர் பத்தாம் திகதி தேர்தல். தொகுதிகளின் எல்லைகளில் சில மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ரொறன்ரோ பெரும்பாகத்தில் கணிசமான சிறுபான்மையினர் இருப்பதால் அவர்களை இலக்கு வைத்துத் துரித பிரசாரம் நடைபெறுகின்றது. இவர்களுள் இலங்கைத் தமிழரும் இந்தியச் சீக்கியரும் பாகிஸ்தானியரும் அடங்குவர்.

சில மாகாணக் கட்சிகள் தங்கள் ஊடக அறிக்கைகளைத் தமிழிலும் அனுப்ப ஆரம்பித்துள்ளன. தமிழர் நிகழ்வுகளில் தங்கள் கட்சியின் பிரமுகர் ஒருவர் தவறாமல் கலந்து கொள்வதை இக்கட்சிகள் உறுதி செய்து வருகின்றன.

மாகாணத்தை ஆட்சி புரியும் லிபரல் கட்சியின் ரொறன்ரோ பெரும்பாக பொறுப்பு சுகாதார அமைச்சரும் மாகாணத்தின் பிரதி முதல்வருமான ஜோர்ஜ் சிமிதர்மனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பல்வேறு நிகழ்ச்சிகளிலும் இவர் தவறாமல் கலந்து வருவதை அவதானிக்கலாம்.

மாகாண என். டி. பியின் தலைவரான ஹொவார்ட் ஹாம்ப்ரன் சிறுபான்மை இனங்களின் மத்தியில் தீவிரமான பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றார். கடந்த மாதம் தமிழரின் இரண்டு நிகழ்ச்சிகளில் பங்குபற்றியிருந்தார். வெல்க தமிழ் நிகழ்ச்சியில் கலந்து தமிழரின் பிரச்சனைகளை உணர்ந்த உரையினை நிகழ்த்தினார்.

கடந்த 26ம் திகதி கனடியத் தமிழர் பேரவையின் ஏற்பாட்டிலான கலந்துரையாடல் ஒன்றில் பங்குபற்றி ஏராளமான கேள்விகளுக்குப் பதிலளித்தார். குடிவரவு, கல்வி, வைத்தியவசதி, தொழில் வாய்ப்பு போன்ற விடயங்களை ஒட்டியதாக இக்கலந்துரையாடல் ஏற்பாடாகி இருந்ததாயினும், இலங்கை அரசியல் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தது.

“அரசியல் வசதிக்காகப் பயங்கரவாதிகள் என்று ஒருவர் மீது பட்டம் சூட்டுவதைத் தங்களின் என். டி. பி. கட்சி ஒருபோதும் அனுமதிப்பதில்லை” என்று ஹாம்ப்ரன் ஒரு கட்டத்தில் சொன்னார்.

மறுபுறத்தில், மாகாணத் தேர்தலுக்கு அபேட்சகர்களைத் தெரிவதற்கான கூட்டங்கள் ஆரம்பாகியுள்ளன. ரொறன்ரோ நகரப் பகுதியை மையப்படுத்தி இலங்கைத் தமிழர்கள் தங்கள் காய்களை நகர்த்த ஆரம்பத்துள்ளதைப் பார்க்க முடிகின்றது. இப்போதுள்ள நிலைமையில், ஆகக்குறைந்தது மூன்று தமிழர்கள் போட்டியிடலாமென்று தெரியவருகின்றது.

ஸ்காபரோ மத்திய தொகுதியில், கன்சர்வேடிவ் கட்சியின் அபேட்சகராகத் திரு. சாமி அப்பாத்துரை போட்டியிடத் தெரிவாகியுள்ளார். அபேட்சகரைத் தெரிவதற்கான தேர்தலில் தம்முடன் போட்டியிட்ட வேற்றினத்தவர் இருவரையும் விட அமோக வாக்குளைப் பெற்று அபேட்சகராகியுள்ளார். மாகாண முதல்வராக மைக் ஹரிஸ் ஆட்சி புரிந்த காலத்திலிருந்து கன்சர்வேடிவ் கட்சியில் உறுப்பினராக இருந்து வரும் சாமி அப்பாத்துரைக்குத் தமிழர்கள் ஒன்றிணைந்து வாக்களித்தால் வெற்றி வாய்ப்பு அதிகமுண்டு.

ஸ்காபரோ - கில்ட்வூட் தொகுதியிலும் ஒரு தமிழர் அபேட்சகராகும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. தற்போது மார்க்கம் கல்விச் சபையில் உறுப்பினராக (school trustee) இருக்கும் திரு. நீதன் சண்முகராஜா, என் டி. பி கட்சி அபேட்சகராக நிறுத்தப்பட உள்ளதாக நம்பகரமாகத் தெரியவந்துள்ளது. முன்னர் ஸ்காபரோ கிழக்கு என அழைக்கப்பட்ட இந்தொகுதியில் கணிசமான அளவு தமிழர்கள் வாழுகின்றனர். 1990களின் ஆரம்பத்தில் பொப் றே (Bob Rae) தலைமையில் என். டி. பி ஒன்றாறியோவை ஆட்சி புரிந்த வேளையில், இந்தத் தொகுதி என். டி. பி வசமாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

ஸ்காபரோவின் மற்றொரு தொகுதியில் தமிழ் ஒலிபரப்பாளர் ஒருவர் நியமனம் பெற முயற்சி எடுத்து வருகின்றார். ஆனால் கட்சி அதற்கு ஆதரவாக இன்னமும் கொடி காட்டவில்லை. அபேட்சகர் தெரிவுக்கு தொகுதியின் லிபரல் அமைப்பு தேர்தல் நடத்துமானால், தமிழ் ஒலிபரப்பாளர் போட்டியிடவுள்ளார். கடந்த இரண்டு மாநகரசபைத் தேர்தல்களில் முறையே மார்க்கம், ரொறன்ரோ பகுதிகளில் போட்டியிட்டு அனுபவம் பெற்றவர் இவர்.

**உக்கிரன் பார்வை**


வேறு தமிழர்கள் மாகாணத் தேர்தலில் போட்டியிடுவது பற்றிய தகவல்கள் எதுவும் இதுவரை வெளியாகவில்லை. இந்தத் தேர்தலுடன் இணைந்ததாக, விகிதாசார முறைப்படி குறிப்பிட்ட ஒரு தொகை எம் பிக்களைத் தெரிவதற்கான கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பும் (Referendum) நடைபெறவுள்ளது. இதற்கான ஒழுங்கு விதிகளையும் அரசாங்கம் பிரகடனம் செய்துள்ளது.

இவை பற்றிய வரைமுறைகளை மாகாணத் தேர்தல் ஆணையாளர் பிரகடனம் செய்துள்ளார். இது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமானால், இங்குள்ள சிறுபான்மையினங்கள் முழு ஆதரவாக இதற்கு வாக்களிக்க வேண்டும். முக்கியமாக, ரொறன்ரோ பெரும்பாகத்திலேயே அதிதொகை சிறுபான்மை இனங்கள் வசிப்பதால் இவர்களின் ஏகோபித்த ஆதரவு இதற்கு அவசியம்.

தமிழ்ச் சமூகத்திலிருந்து பெண்கள் எவரும் இத்தேர்தலில் குதிக்க முன்வரவில்லை. இது ஒரு பெரும் குறைபாடு. தகுதியும் ஆளுமையும் கொண்ட பல பெண்கள் இங்கிருந்தும், ஒருவர்கூட முன்வராதது ஏனோ தெரியவில்லை?

ஒன்றாறியோ மாகாண சபையில் ஏற்கனவே உறுப்பினர்களாக (M.P.P) இருந்து வரும் மூன்று பிரதான பெண்கள் அரசியலிலிருந்து ஓய்வு பெறுவதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

ஹமில்டன்-மொன்ரெய்ன் தொகுதியை 1999ம் ஆண்டிலிருந்து பிரதிநிதித்துவம் செய்து வந்த Marie Bountrogianni, ஸ்ரோனிகிறீக் தொகுதியின் Jenniffer Mosso மற்றும் ஒன்றாறியோ வடமுனையைச் சேர்ந்த ஷெல்லி மார்ட்டல் ஆகிய மூவருமே அரசியலிலிருந்து ஓய்வு பெறுபவர்கள். என் டி. பி. தலைவர் ஹொவார்ட் ஹாம்ப்டனின் துணைவியான ஷெல்லி, தமது தந்தையார் பிரதிநிதியாகவிருந்த அதே தொகுதியில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ச்சியாக இருந்தவர். இவர்களின் இடத்துக்கு அந்தந்தக் கட்சிகள் பெண்களை நியமிப்பார்களோ தெரியாது.



மணி வேலுப்பிள்ளை
எழுதும் தொடர்

பகுதி 16

# காதில் விழுந்தவை

192. *சீனாவிடமிருந்து இலங்கை ஆயுத தளபாடங்களைக் கொள்வனவு செய்கிறது* (2007-02-26). படைக்கலங்களை... குறிப்பு: 13, 182.

193. *இலங்கையின் நில ஒருமைப்பாடு* (2007-02-26). Sri Lanka's territorial integrity. இலங்கையின் ஆள்புல ஒருமைப்பாடு.

194. *இந்திய புகையிரத வரவு-செலவுத் திட்டம்* (2007-02-26). Indian Railway Budget. இந்திய தொடரூந்துத் துறையின் வரவு-செலவுத் திட்டம்.

195. *சிறிலங்கா போர் விமானங்கள் வன்னி வான் பரப்பில் பறப்புக்களை மேற்கொண்டன* (2007-02-26)..... பறந்தன.

196. *மகசீன் சிறையில் உண்ணா விரதம் இருக்கும் கைதிகளுள் இருவர் கோமா நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்* (2007-02-26). Coma... மயக்க நிலைக்கு.....

197. *மட்டக்களப்பில் விடுதலைப் புலிகள் நடத்திய பீரங்கித் தாக்குதலில் தூதுவர்கள் காயமடைந்தனர்* (2007-02-27). (1) ஈழநாட்டுச் சொல்தொகுதிகளில் தூதர் (ambassador), தூதுவர் (messenger) என்று மிகவும் நுணுக்கமாக இனம் பிரிக்கப்பட்டுள்ளது. (2) அமெரிக்கத் தூதர் Robert Blake, இத்தாலியத் தூதர் Prio Mariani இருவருமே காயமடைந்தனர். தூதுக்குழுவில் மொத்தம் 15 சாணக்கியர்கள் அல்லது சூழியலாளர்கள் அல்லது இராசதந்திரிகள் (diplomats) இடம்பெற்றனர் (BBC, 2007-02-27).

198. *பீஜிங் அனைத்துலக விமான நிலையத்தில் இலங்கை ஜனாதிபதிக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது* (2007-02-27). Beiging International Airport. பீஜிங் அனைத்து நாட்டு (அல்லது சர்வதேச) விமான நிலையம். இங்கு nation என்பது நாடு (தேசம்) என்றும், inter என்பது (நாடுகளுக்கு) இடைப்பட்ட என்றும் பொருள்படும். குறிப்பு: 167.

199. *அவுஸ்திரேலிய நில எல்லைக்குள் புகுந்த 83 இலங்கை அகதிகள் திருப்பி அனுப்பப்படுவர்* (2007-02-27). Territorial limits. ஆள்புல எல்லை. குறிப்பு: 193.

200. *கிழக்கிலங்கையில் சர்வதேசத்தின் உயிர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளன என்று ஐ.நா. செயலாளர் குற்றஞ்சாட்டியுள்ளார்* (2007-03-01). இதன் தோற்றுவாய் தெரியவில்லை. (1) ஒருவேளை lives of forign nationals என்பது சர்வதேசத்தின் உயிர்கள் என்று பெயர்க்கப்பட்டிருக்கலாம். **வெளிநாட்டவர்களின் உயிர்கள்** என்பதே அதன் பொருள். (2) உயிர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளன என்பது பொருந்தாது. **உயிர்கள் பொருட்படுத்தப்படவில்லை.** (3) அவர் ஐ.நா. வின் வெறும் செயலாளர் (Secretary) அல்லர். **ஐ.நா. செயலாளர் நாயகம்** அல்லது **ஐ.நா. செயலாளர் அதிபதி** (UN Secretary General).

2001. *விடுதலைப் புலிகள் சர்வதேச ரீதியாக பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு சாட்சியங்கள் உள்ளன* (2007-03-1). (1) *சர்வதேச ரீதியாக* (internationally) என்பதை **உலகளாவிய வகையில்** என்று தமிழ்ப்படுத்தலாம். (2) Evidence என்பது இங்கு *சான்று* என்றே பொருள்படும். **சான்றுகள்** உள்ளன. குறிப்பு: 94.

2002. *பல நாடுகளில் சந்திர கிரகணம் நடைபெற்றது* (2007-03-03). (1) தமிழில் ஏற்கனவே திங்கள் கோள் என்னும் பதம் உண்டு (கடியலூர் உருத்திரங் கண்ணனார், *பெரும்பாணாற்றுப் படை*). *திங்கள் கோள்* என்பது திங்கள் (மதி) கொள்ளப்படல் என்று பொருள்படும். கதிரவனின் ஒளி புவியில் விழ, புவியின் நிழல் திங்களை (மதியை) மறைப்பது போல் வடமொழியின் நிழல் தமிழை மறைத்ததால் *சந்திர கிரகணம்* (lunar eclipse) உண்டாகியது. (2) அதனை **திங்கள் கோள் நேர்தல்** என்று உருத்திரங் கண்ணனார் குறிப்பிட்டுள்ளார். (3) அது பல நாடுகளில் *நடைபெறவில்லை*. **தென்பட்டது**.

2003. *விடுதலைப் புலிகளுடன் தொடர்புள்ள 20 சிங்களவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். அவர்களுள் பெரும்பான்மையோர் சிங்களவர்கள்* (2007-03-05). சிறுபான்மையோர் தமிழர்கள்!

204. *தமிழகம் ஏன் காவிரி நீர் குறித்து ஒரு விவாதத்தைச் சந்திக்க மறுக்கிறது?* (2007-03-06). ...to face a debate. ஒரு விவாதத்தை **எதிர்கொள்ள** மறுக்கிறது? குறிப்பு: 104.

205. *விடுதலைப் புலிகளின் பிடியில் உள்ள சிங்களவர்களை அவர்களுடைய உறவினர்கள் பார்வையிட்டார்கள்* (2007-03-07). Held by the LTTE என்பது *புலிகளின் பிடியில் உள்ள* என்று பெயர்க்கப்பட்டிருக்கலாம். இது முறைசாரா (ஊர்) வழக்கு. Hold somebody prisoner என்பது ஒருவரைச் *சிறைசெய்* அல்லது *சிறைபிடி* அல்லது *கைதுசெய்* அல்லது *தடுத்துவை* அல்லது *அடைத்துவை* என்று பொருள்படும். சம்பந்தப்பட்டவர்கள் ஒரு சமரின்பொழுது சிறைபிடிக்கப்பட்டதாகக் கேள்வி. விடுதலைப் புலிகளால் **சிறைபிடிக்கப்பட்ட.....**

206. *விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளிலிருந்து சாதாரண பொதுமக்கள் வெளியேறி வருகிறார்கள்* (2007-03-09). *சாதாரண மேன்மக்கள்* அங்கு தொடர்ந்து தங்கியிருக்கிறார்கள் போலும்! ஒன்றில் **சாதாரண மக்கள்** அல்லது **பொதுமக்கள்**. குறிப்பு: 134.

207. *விடுதலைப் புலிகளின் நிலைகளை இலங்கைப் படையினர் சரிக்கட்டியுள்ளார்கள் என்று பிரசாத் சமரசிங்கா தெரிவித்தார்* (2007-03-09). ஆதலால் விடுதலைப் புலிகள் இனிமேல் மிகவும் பவுத்திரமாக இருப்பார்கள்! *செயலிழக்கச் செய்* என்பது கேலியாக *சரிக்கட்டு* எனப்படுவது தெரிந்ததே. எனினும் *சரிக்கட்டு* என்பது முறைசார் வழக்கல்ல. Neutralize என்னும் சொல்லையே **செயலிழக்கச்செய்** என்னும் பொருளில் சமரசிங்கா கையாண்டார் (BBC, 2007-03-09). ... **செயலிழக்கச் செய்தார்கள்** என்று *தெரிவித்தார்*.

208. *மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற அமெரிக்காவின் அவதானத்தை ஸ்டீபன் மான் தெரிவித்தார்* (2007-03-10). Stephen Mann expressed America's concern that human rights should be safeguarded... அமெரிக்காவின் **கரிசனையை** சீமான் எடுத்துரைத்தார்.

209. *கைதுசெய்தவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டார்கள்* (2007-03-10). **கைதுசெய்யப்பட்டவர்கள்** எவரும் விடுதலை செய்யப்படவில்லை!

(அடுத்த இதழிலும் தொடரும்)

# கோடை விடுமுறையும் பிள்ளைகளும்
# Summer Holidays and Children

கோடை விடுமுறை ஆரம்பமாகிவிட்டது. முழுதாக இரண்டு மாதங்கள் பிள்ளைகளின் அட்டகாசத்தை எவ்வாறு சமாளிப்பது எனப் பெற்றோர் அங்கலாய்க்கத் தொடங்கி விட்டார்கள். ஆசிரியர்களுக்கோ பெரிய சந்தோஷம். தேரை இருப்புக்குக் கொண்டு வந்த உணர்ச்சி. வருடம் முழுவதும் இன்றைய மாணவர் சமுதாயத்தின் கெடுபிடிகளுக்கு ஈடுகொடுத்து கல்வி இலாகாவின் எதிர்பார்ப்புகளுக்கு அமைய கற்பித்தலை முடித்துக் கொடுத்துவிட்டு இரண்டு மாதங்களும் எங்காவது ஆறுதல் எடுக்கப் போய்விடுவார்கள். பிள்ளைகளோ இந்த நீண்ட விடுமுறை காலத்தை எவ்வாறு பிரயோசனமாகக் கழிக்கலாம் எனத் தெரியாது தமது பொழுதை அவப் பொழுதாகக் கழித்துக் கொண்டிருப்பார்கள். கோடை காலம் என்பது நீண்ட பகல் பொழுதைக் கொண்டிருப்பதால் வெளியில் உலாவக் கூடிய நேரம் மிகவும் அதிகமாக உள்ளது. இதனால் வீண் பிரச்சனைகளில் பிள்ளைகள் அகப்படக்கூடிய வாய்ப்புகளும் அதிகமாக உள்ளது. பாடசாலைகளில் வன்முறைச் செயல்கள் அதிகரித்தவண்ணம் உள்ள ஒரு காலகட்டத்தில் இன்று பிள்ளைகள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். வெளியில் சென்ற பிள்ளைகள் உயிருடன் திரும்பி வருவார்களோ எனப் பெற்றோர் பயப்படும் ஒரு நெருக்கடியான துப்பாக்கிக் கலாசாரம் இன்று காணப்படுகிறது. பெற்றோர் இருவரும் வேலைக்குப் போகும் வீடுகளும், ஒற்றைப் பெற்றோர் உள்ள வீடுகளும் பிள்ளைகளுக்குப் பாதுகாப்பு வழங்கத் தவறி விடுகின்றன. பெற்றோர் பாடசாலைகளிடமிருந்து அதிக அளவில் பிள்ளைப் பராமரிப்பை எதிர்பார்க்கிறார்கள். ஆனால் வகுப்புகளில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகளவில் இருப்பதால் பாட-சாலைகளால் பிள்ளைகளைத் தனிப்பட்ட முறையில் கவனிக்க முடியவில்லை. வழமையாகக் காணப்படும் கோடைகால பாடநெறிகளையும், நிரல்களையும், நிதி நெருக்கடி காரணமாக கல்வி இலாகாவினால் வழங்க முடியவில்லை. இந்நிலையில் விடுமுறையை விளையாட்டோடு கலந்த ஒரு கற்றல் காலமாகப் பயன்படுத்தப் பிள்ளைகளுக்கு உதவுதல் பெற்றோரின் கடமையாகும். குடும்பத்தை மையமாகக் கொண்ட கற்றல் முறைகளே ஒரு பிள்ளையைத் திறமைசாலியாக்குவதாக கல்வியாளர்கள் கருதுகின்றனர். ஒரு பிள்ளையின் கற்றலில் ஒரு சிறு பகுதி மாத்திரமே வகுப்பறைக் கற்றலால் ஏற்படுகிறது. வீட்டிலும் சமூகத்திலும் அவர்களை வளர்ச்சியடையச் செய்வதோடு மாத்திரமல்லாது, வகுப்பில் கற்றதை மனதில் படியச் செய்கிறது.

பிள்ளைகளின் கற்றலை எவ்வாறு இவ் விடுமுறையில் பெற்றோர் ஊக்குவிக்கலாம் என்பதனை நோக்குவோம். பிள்ளைகளுக்கு பொதுவாக தங்கள் செயல்களுக்குப் பெற்றோர் மதிப்புக் கொடுப்பதில்லை என்ற ஒரு தப்பபிப்பிராயம் உண்டு. பெற்றோர் பிள்ளைகளின் எண்ணங்களுக்கு மதிப்புக் கொடுத்து அவர்களின் சுயமதிப்பை வளர்த்தல் வேண்டும் (self esteem). பிள்ளைகள் எமக்கு விரும்பாத பல விடயங்களை செய்யத்தான் போகிறார்கள். அதற்குரிய அணுகுமுறையில் தான் பெற்றோர் கவனமாக இருத்தல் வேண்டும். அவர்கள் செயல்களுக்கு உடனே மறுப்புத் தெரிவித்து கூப்பாடு போட்டு அவர்களும் எங்களோடு எதிர்த்துப் பேசுவதற்குரிய சந்தர்ப்பங்களை தவிர்த்தல் வேண்டும். விடுமுறை நாட்களில் பெற்றோர் விரும்பாத நண்பர்களோடு பிள்ளைகள் கூடித் திரிய விரும்புவார்கள். அவர்களின் நண்பர்கள் யார், அவர்களின் நடவடிக்கைகள் என்ன என்பதனை அன்றாடம் அவதானித்தல் வேண்டும். பிள்ளைகளுக்கு விளங்கக் கூடிய வகையில் இந் நண்பர்களால் ஏற்படும் சிக்கல்களை எடுத்துக் கூறுங்கள். பிள்ளைகளுக்கு ஏற்படும் பிரச்சனைகளால் நாமும் பாதிக்கப்படுவோம் என்பதனை அவர்களுக்கு விளங்க வையுங்கள். அவர்களோடு கலந்துரையாடி அவர்கள் மேல்




கனகேஸ்வரி நடராஜா

ஆசிரியர், இலங்கை-கனடா



நாம் மதிப்பு வைத்திருப்பதை எடுத்துக் கூறுதல் வேண்டும். அவர்களுக்கு தன்னம்பிக்கையும் சுயமதிப்பும் ஏற்படும் வகையில் அவர்களை நாம் நடத்துதல் வேண்டும்.

அடுத்து பிள்ளைகளுக்கு, வீட்டு வேலைகளில் பயிற்சி அளிக்க உகந்த நேரம் இதுவே (work habits). பாடசாலைக்கு போகும் அவசரத்திலும், படிப்புச் சம்பந்தமான வேலைகள் அதிகம் இருப்பதாலும் பல பெற்றோர்கள் பிள்ளைகளை வீட்டு வேலைகளில் ஈடுபடுத்துவதில்லை. பிள்ளைகள் சாப்பிட்ட பாத்திரங்களைக் கூடப் பல பெற்றோர்கள் தாமே துப்பரவு செய்வார்கள். பிள்ளைகள் தங்கள் வேலைகளைச் செய்யப் பழக்குவதற்கு விடுமுறை நாட்களில் போதிய அவகாசம் உண்டு. அது மாத்திரமன்றி வீட்டிலுள்ள ஏனைய வேலைகளிலும் பிள்ளைகளின் உதவியைப் பெற்றோர் நாடுதல் வேண்டும். அவர்கள் தமது சிறிய கைகளால் செய்யும் வேலைகளை மெச்சி அவர்களை ஊக்குவித்தல் வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் பிள்ளைகளைச் சிறிய வயதிலேயே பொறுப்புள்ளவர்களாக்க முடியும். பெற்றோர் தாமே எல்லா வேலைகளையும் செய்வதால் தாங்கள் களைத்துப் போவது மாத்திரமல்லாது பிள்ளைகளையும் சோம்பேறிகளாக்கி விடுவார்கள். பிள்ளைகளுக்கு விடுமுறை காலத்தில் வேலைகளைப் பிரித்து கொடுத்துவிட்டு பெற்றோர் ஆறுதல் அடைய வேண்டும்.

பிள்ளை வளர்ப்பில் பெற்றோர் பிள்ளைகளின் கல்வி விருத்திக்கு அளிக்கும் உதவிகள் ஒரு முக்கிய இடத்தை வகிக்கிறது (Family support of Academics). பிள்ளைகளின் அறிவு விருத்திக்குத் தேவையான நேரத்தையோ, அன்றேல் பொருட்களையோ, பணத்தையோ பிள்ளைகளுக்கு வழங்குவதற்கு பெற்றோர் எப்பொழுதும் தயாராக இருத்தல் வேண்டும். இவ்விடயத்தில் எமது சமூகத்தவர்கள் மிகவும் திறம்படச் செயலாற்றுகிறார்கள். ஆயினும் அதனைச் சரியான முறையில் வழங்குகிறார்களோ என்பது கேள்விக்குரிய விடயமாகும். பல பெற்றோர் தேவையற்ற பொருட்களைப் பிள்ளைகள் கேட்டு விட்டார்கள் என்பதற்காக வாங்கிக் கொடுக்கிறார்கள். கல்வி வளர்ச்சிக்குத் தேவையானவை பற்றிய விளக்கம் உள்ளவர்களோடு கலந்தாலோசித்து பின் வாங்குதல் நலம். வாங்கிக் கொடுத்த பொருட்களை பிள்ளைகள் பொறுப்பு உணர்ச்சியோடும், பிரயோசனமாகவும் பாவிக்கிறார்களா என மேற்பார்வை பார்த்தல் அவசியம். சில பெற்றோர் எத்தனை தனியார் கல்விப் போதனை இடங்கள் உள்ளனவோ அங்கெல்லாம் அனுப்புகிறார்கள். அளவுக்கதிகமான சுமையை பிள்ளைகளின் மேல் சுமத்துதல் மிகவும் அறிவீனமான செயலாகும். படிப்புச் சம்பந்தமான உதவிகள் பற்றி பாட ஆசிரியர்களோடு கலந்தாலோசித்து செயல்படுதல் நன்மை பயக்கும்.

அடுத்து மொழி விருத்தி பிள்ளைகளின் கற்றலுக்கு இன்றியமையாதது. பிள்ளைகளின் மொழியாற்றல் வீட்டிலேயே அதிகம் விருத்தியடைகிறது. (Family emphais on Language Development) விடுமுறை காலத்தில் நாளாந்தம் தினசரிப் பத்திரிகைகளை பிள்ளைகளை வாசிக்கப் பழக்குதல் வேண்டும். பெற்றோரும் வாசிப்பில் ஈடுபட்டால் தான் பிள்ளைகளுக்கும் அதில் நாட்டம் ஏற்படும். மொழி என்பது ஏனைய பாடங்களைப் போல் ஒரு சில மணித்தியாலங்கள் கற்பதால் கிரகிக்கக் கூடிய ஒன்றல்ல. பல வருடங்களாக கற்பதாலேயே மொழி விருத்தியடைகிறது (Language Grows). விடுமுறைக் காலமே இத்தகைய ஒரு வளர்ச்சிக்கு ஏற்ற நேரம். காசு கொடுத்துத் தான் புத்தகங்கள், சஞ்சிகைகள் வாங்க வேண்டுமென்ற நியதி இந் நாட்டில் கிடையாது. தாராளமாக இவற்றையெல்லாம் இரவலாக பல நூல் நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம். பல பிள்ளைகள் கணினியின் முன்பாக இருந்து

(மறுபக்கம் வருக)



கவிநாயகர் கந்தவனம் தரும்

## கனடியக் காட்சிகள்

# வெல்க தமிழ்!

'உலகத்தமிழர்' பத்திரிகையில் விளம்பரத்தைப் பார்த்ததும் நாட்குறிப்பேட்டில் குறித்துக் கொண்டேன். கட்டாயம் பங்குபற்ற வேண்டும் என்ற தீர்மானத்தில்.

நாள்: 11.06.2007 திங்கட்கிழமை.

வெயிலில் நடந்துபோய் வீதியில் ஏறிப் பேரூந்தைப் பிடித்து 4:15க்கு எல்லாம் உரிய இடத்தை அடைந்துவிட்டேன். குங்கும சந்தனக் கொடிகள் குதூகலத்தோடு வரவேற்றன.

வரவேற்ற இடம் ஸ்காபரோ அல்பேட் காம்பெல் சதுக்கம்.

கூட்டம் இன்னும் தொடங்கவில்லை. கூட்டமும் அவ்வளவாக இல்லை. வேலை நாள் அல்லவா? இருப்பினும் எம்மவர் தமிழ் உணர்வு கரைபுரளும் என்பதை உறுதிப்படுத்தியவாறு மக்கள் வந்துகொண்டே இருந்தார்கள். நான் நிழலை நாடிப் படிக்கட்டு ஒன்றில் அமர்ந்து கொண்டேன். என்னோடு தமிழீழச் சங்கத் தலைவர் திரு. துரைராஜா மற்றும் நண்பர்கள்.

இந்நேரம் தமிழீழ மக்களின் நடைமுறை அரசை அனைத்துலகமும் அங்கீகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு ஜெனிவாவில் ஐ.நா. சபைக்கு முன்னால் நடத்தப்பெற்ற வெல்க தமிழ்ப் பேரெழுச்சி ஐரோப்பாவிலும் பிற கண்டங்களிலும் அதிர்வலைகளைப் பரப்பிக் கொண்டிருக்கும்.

தமிழ் மக்கள் வந்துகொண்டே இருந்தார்கள்.

வெற்றிடங்கள் நிரப்பப்பட்டு விட்டன. கூட்டத்தை ஊடறுத்து இறயில் வண்டிபோல ஓர் அணி - இளைஞர் அணி துணிச்சலாகவே தலைவரின் எடுப்பான புன்முறுவல் படங்களையும் புலிக்கொடிகளையும் தாங்கிய வண்ணம் இலங்கை அரசினது தமிழருக்கு எதிரான அட்டுழியங்கள் பற்றிக் குரல்களை எழுப்பியவாறு வரவே உணர்ச்சியலை கிளர்ச்சி கண்டது. அதனைத் தொடர்ந்து 5:00 மணியளவில் நிகழ்ச்சிகளும் தொடங்கலாயின.

வழக்கம்போல பொன்னையா விவேகானந்தனின் குரல் மின்னலைப் பாய்ச்சியது. இருந்த முதியவர் பலரை எழும்ப வைத்தனர் உரை நிகழ்த்திய யுவதிகள்.

மக்கள் வந்து கொண்டே இருந்தார்கள். சதுக்கம் பொங்கி வழிந்தது. குறுகிய அறிவித்தலில், வேலை நாளாகிய ஒரு திங்கட்கிழமையில் கூடிய மக்கள் வெள்ளம் என்னை வியக்க வைத்தது. தாயக உணர்வு மக்களை ஒற்றுமைப்படுத்தியிருப்பது கண்டு உள்ளார மகிழ்ந்தேன். அதேவேளை தேசியத் தலைவர் மீது வைத்திருக்கும் நம்பிக்கையையும் கனடிய அரசுக்குப் புலப்படுத்தும் வகையில் தமிழ் மக்கள் வெள்ளம்போல் கரைபுரண்டனர்.

மற்றுமொரு சிறப்பு இளைஞர் பங்களிப்பு. எதிர்காலம் இளைஞரது கையில் என்பது உறுதியாச்சு! தேசவிடுதலைப் போராட்டங்களுக்கும் உந்து சக்தியாக - உயர்ச்சத்தாக அவர்கள்தானே விளங்குகிறார்கள்! அவர்களுக்கு இவ்விதமான ஒற்றுமைப் பேரெழுச்சிகள் மேலும் உற்சாகத்தை அளிக்கவல்லன. இதனை, "வெல்க தமிழ் என்னும் எழுச்சிப் பேரணியில் பங்கு கொண்டு தாயக பாசத்துடன் தேசத்தின் விடுதலைக்காக, உலக அரங்கில் நீங்கள் எழுப்பி வரும் உரிமைக்குரல் எமது மக்களுக்கு தென்பையும் திடத்தையும் கொடுத்து நிற்கிறது. தேசியத் தலைமைக்கு மகிழ்ச்சியையும் பெருமிதத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது" என்று ஜெனிவாவில் நடைபெற்ற 'வெல்க தமிழ்' நிகழ்வுக்காக அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்திருந்தார். இது எமது இளைஞருக்கும் மகிழ்ச்சியாகவே இருக்கும்.

தமிழ் வெல்லும்!

## கோடை விடுமுறையும்..

வாசிப்பதைக் காண்கிறோம். இதில் இவர்கள் சிலவற்றை கற்றாலும், பலவிதமான நூல்களை அலசி, ஆராய்ந்து கற்பதற்குச் சமமாகாது. அத்துடன் மாத்திரம் நின்றுவிடாது சிறுவருக்குரிய கதைப் புத்தங்களை பிள்ளைகளைக் கட்டாயப்படுத்தி வாசிக்கச் செய்தல் வேண்டும். எழுத்தாற்றலும் விருத்தியடைய வேண்டுமாகில் தாம் வாசித்த கதைப் புத்தகங்களை பற்றி தமக்கு விரும்பியவற்றை எழுதும்படி ஊக்குவிக்கலாம். வேலையால் வந்தவுடன் பெற்றோர் பிள்ளைகள் என்ன வாசித்தார்கள் என விசாரித்தல் அவசியம். பெற்றோர் அக்கறைப்படுத்தாவிட்டால் பிள்ளைகளும் அக்கறை எடுக்க மாட்டார்கள்.

கல்வி சம்பந்தமான எங்கள் குடும்ப எதிர்பார்ப்புகளைச் சிறுவயதில் இருந்தே பிள்ளைகளுக்குத் தெரியப்படுத்துதல் வேண்டும். (Family Academic Expectations). ஒவ்வொரு பிள்ளையிடமும் வெவ்வேறு வகைப்பட்ட திறன்கள் காணப்படும். அவற்றை அடையாளம் கண்டு அதில் எவ்வாறு அவர்கள் மேன்நிலையடைய முடியும் என உசாவுதல் பெற்றோரின் கடன். இங்கு பிள்ளைகள் சிறுவயதில் பாடசாலைக் கல்வியை குழப்புதல் சகஜம். அவ்வாறு நடைபெற்றாலும் ஏதோ ஒரு தொழில் செய்து தங்களால் வாழ முடியும் எனப் பிள்ளைகள் நினைக்கிறார்கள். அத்தகைய எண்ணம் ஏற்படாதவாறு நாம் அவர்கள் உயர்கல்வி பெறுவதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளோம் என்பதைச் சிறுவயதில் இருந்தே தெரியப்படுத்துதல் வேண்டும். இந் நாட்டில் எந்த வயதிலும் கற்க முடியும். பிள்ளைகளுக்கு முன்மாதிரியாக நாம் நடக்க வேண்டும். (Role models). அப்பொழுதுதான் அவர்களுக்கும் எங்கள் மேல் மதிப்பும் மரியாதையும் ஏற்படும்.

பிள்ளைகளுக்கு விடுமுறை காலத்தில் பெற்றோர் வேலைக்குச் செல்வதால் அவர்களைக் கவனிக்கவோ, கல்வி கற்க உதவவோ முடியவில்லை என்பதே பலரின் ஆதங்கம். குறைந்த பொழுதாயினும் தரமான பொழுதாக அமையும்படி பிள்ளைகளோடு இருக்கப் பார்க்கப் பாருங்கள் (Quality Time). கந்தோர் வழங்கும் விடுமுறையை பெற்றோர் பிள்ளைகளின் விடுமுறை காலத்தோடு முடியுமாகில் எடுக்கப் பாருங்கள். எங்கள் பிள்ளைகளின் கல்வியே எங்கள் பெரிய முதலீடு. ஏனைய முதலீடுகள் எல்லாம் எங்கள் வாழ்க்கைக் காலத்தோடு அற்றுப் போய்விடும். தொடர்ந்தும் எங்கள் குடும்பங்கள் சிறப்பாக வாழ வேண்டுமாகில் பிள்ளைகளின் அடைவுகளில் தான் நாம் தங்கியிருக்கிறோம் என்பதனை அவர்களுக்கு சிறுவயதிலேயே விளங்கப்படுத்தி, நல்வழியில் வாழ வகை செய்தல் வேண்டும்.

## தமிழர் தகவல் கனடிய தின விழா

தமிழர் தகவல் பத்தாவது ஆண்டாகக் கடந்த மாதம் 29ம் திகதி ஸ்காபரோவில் நடத்திய கனடிய தின விழா ஒளிப்படங்களும், செய்தியும், மாணவர் விவேகப் போட்டியின் பதில்களும் அடுத்த மாத இதழில் இடம்பெறும்.


## ஒன்ராறியோ கணினி மயமான மருத்துவ அறிக்கை அமைப்பினை அடியொற்றுகிறது

மருத்துவ அறிக்கைகள் பல வழிகளில் உதவ முடியும்.

மற்றைய மாகாணங்களை விட ஒன்ராறியோ மின்னியல் மருத்துவ அறிக்கைகளை நடைமுறைப்படுத்துவதில் மிகவும் பின்தங்கியுள்ளதாகவும், இந்நிலைமை உடனடி கவனத்திற்கு எடுக்கப்பட வேண்டியதொன்றென்றும் ஒன்ராறியோ சுகாதார தகவல்கள், இரகசியம் பேண் அதிகாரி கூறியுள்ளார்.

கனடிய சுகாதார தகவல் மையத்தின்படி, இலாப நோக்கற்ற நிறுவனமொன்று மருத்துவ அறிக்கைகளை மின்னியல்படுத்துவதில் உதவுவதாகவும், பரந்துபட்ட வகையில் மருத்துவ அறிக்கைகளை பாவிக்கக் கூடியதாக இருப்பது காத்திருப்பு காலத்தை குறைக்கவும், குறைந்தளவில் மருந்துகளின் பக்கவிளைவுகளை உண்டாக்குவதாகவும், சிறந்த முறையில் மருந்துச் சிட்டுகளின் விநியோக முறையை அமுல்படுத்தவும் உதவும் என்று தெரிவிக்கின்றார்.

இன்னும், அதிகாரம் பெற்ற மருத்துவ உத்தியோகத்தர்கள் கையாளக்கூடிய வகையில் தனிநபர் மருத்துவ அறிக்கைகளை, எப்பொழுது ஒவ்வொருவரும் எதிர்பார்க்கலாம் என தெரியாதுள்ளதாக கனடிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.



பொன்னையா விவேகானந்தன்

**பொன்னின் பொழிகை** தொடர் 10

## புற்று

கண்டறியப்பட்ட நோய் ஒன்றைக் குறிப்பதற்கு, 'புற்று' எனப் பெயரிடுவதற்கு முன்பாகவே 'புற்று' என்ற சொல் ஆழப்பொருள் கொண்டதாக தமிழில் கையாளப்பட்டிருக்கின்றது. இயல்பான வளர்ச்சி நிலையில் மாறுபட்டுத் தோன்றும் ஒரு திரட்சியைப் புற்று எனலாம்.

இந்தப் புற்று, மண்ணில் இருக்கிறது.
மனிதரில் இருக்கிறது. விலங்கில், பறவையில், மரத்திலும் இருக்கிறது.
எல்லாப் புற்றுகளும் இயற்கையாகத் தோன்றுவதல்ல...
இயற்கையில் தோன்றிய வேறு சில உயிர்களால் தோற்றுவிக்கப்படுவது....
மண்ணில் புற்றைத் தோற்றுவிப்பது, கறையான்...
இது மிகச் சிறிய உயிரினம்.
எள்ளளவு உருவம், சிறு காற்றாலும் வீசப்படக்கூடிய கனமற்ற தன்மை, சிறு பாரம் பட்டாலும் நசிந்துவிடும் மென்மை.
ஆனாலும் மண்ணைக் குடைந்து, மென்மையாக்கி, ஆறடி உயரத்திற்கும் மேலாக அந்த மண்ணைக் குவித்து,
தமக்கென அது கட்டும் வீடு. புற்றாகி விடுகின்றது.

இது மண்ணின் இயல்பில் இருந்து மாறுபட்ட திரட்சி.
மண்ணில் தோன்றுகின்ற புற்றுகள் மண்ணுக்கும் கறையானுக்கும் பெருமை தேடித் தருகின்றன.
வளமான மண்ணில்தான் புற்றுகள் தோன்றும் என்பர். மண் புற்றுகள் வளமான மண்ணின் அடையாளங்கள்.
ஒரு கறையான் கூட்டம், ஓர் இரவுக்குள் ஓர் அடிக்குமேல் புற்றைக் கட்டும் ஆற்றல் கொண்டது என்பர்.


மிகச் சிறிய உயிரான கறையான் கூட்டத்தின் பெருஞ் சாதனைச் சின்னம் இந்தப் புற்றுகள். எறும்பைப் போல் சுறுசுறுப்பு கறையான்களுக்கு இல்லை என்றும் கூறுவர். ஆனால், எறும்புகளைப் போல்சிறு பொந்துகளுக்குள் கறையான்கள் வாழ்வதில்லை. புற்று எனப்படுகின்ற மாளிகை கட்டி வாழும் இலட்சியவாதிகளாகவே, கறையான்கள் திகழ்கின்றன இடறுப்பட்டு புற்றுகள் சிதைகின்ற போதெல்லாம் சளைத்துவிடுவதில்லை இந்தக் கறையான்கள். மீண்டும் மீண்டும் புற்றுகளைக் கட்டி விடுகின்றன. இன்னுமொரு செய்தி. வீடுகளுக்கு சுவர்கட்ட மனிதர்கள் புற்று மண்ணைத் தான் தேடி எடுப்பர். அதற்குக் காரணம், கறையான்கள் புற்றைக் கட்ட மண்ணில் இருக்கும் களித்தன்மையையே அதிகமாய்ச் சேர்க்கின்றன. கூட்டிக் கழித்துப் பார்த்தால் மண் புற்றுகள்மதிப்புக்குரியவையாகவே திகழ்கின்றன.

மனிதப் புற்று...
இந்தப் புற்று மனிதருக்கு உள்ளேயும் இருக்கின்றது. மனிதனுக்கு வெளியேயும் இருக்கின்றது.

இரண்டுமே மகிழ்ச்சிக்குரியதல்ல. இருக்கும் இடத்தைப் பலவீனமாக்கக் கூடியவை. இதில் மிகவும் துன்பம் தரும் செய்தி என்னவென்றால் காலங்காலமாகப் போராடியும் இரண்டுக்கும் இன்றுவரை மருந்து கண்டுபிடிக்கப்படாமல் இருப்பதுதான். இயல்பைச் சீர்குலைக்கும் இத் திரட்சிகளும் இயல்பாய்த் தோன்றிய உயிர்களாலேயே ஆக்கப்படுகின்றன. இவைதான் உயிர் என அடையாளம் கண்ட பின்னாலும் அவற்றை அழிக்க முடியாது இருப்பது, மனித வரலாற்றின் பெரும் தோல்வி என்பதை ஒப்புக் கொண்டேயாக வேண்டும்.

காலம் சிலவேளை உடற் புற்றுக்கு மருந்தைக் கண்டு பிடிக்கலாம். சமூகப் புற்றுக்கு மருந்தைக் கண்டு பிடிப்பதே பெரும் சவாலாக இருக்கின்றது.

இச்சமூகப் புற்றுகள் காலங்காலமாக சாகாவரம் பெற்று வாழக் காரணங்கள் எவை என்பதைக் கண்டறியாதவரை சமூகத்தின் வெற்றிக்கான புரட்சிகளை, இந்தப புற்றுத் திரட்சிகள் சீண்டிக் கொண்டேயிருக்கும்.



எஸ். ஜெகதீசன்
எழுதுவது

# பாதையில் வேகமாக வருவாயோ!

வேகமாகச் செல்லும் சாரதிகளை கண்காணிக்கக் காவல்துறையினர் ஆங்காங்கே வீதியோரங்களில் தற்காலிகமாக நிலைகொண்டிருப்பதை அவ்வப்போது பலர் அவதானித்திருக்கலாம்.

இந்த வகையில் ரொறன்ரோ பெருநிலப் பரப்பில் சுமார் ஐம்பதிற்கும் அதிகமான நிலைகள் அவர்களுக்கு தங்கச் சுரங்கங்களாக அமைவது நிரந்தரமாகிவிட்டதாம்.

அவர்களின் மறைந்திருந்து பார்க்கும் மர்ம இடங்களை முன்கூட்டியே அறிந்து கொள்வதில் ஆர்வமுள்ளவர்களாக பலர் பரவலாக இருப்பதாக கருத்துக் கணிப்பொன்று தெரிவிக்கின்றது.

அப்படி அறிந்து கொள்வது சட்ட விரோதமான செயலல்ல எனவும் அது மெதுவாகக் குறிப்பிடுகின்றது.

அதனால் அவர்கள் எம்மைப் பிடிப்பதற்கு முன் அவர்களை நாம் 'பிடிப்பது' வேகமாக மனதிற்கு மகிழ்ச்சியூட்டும்.

அத்துடன் அபராதம் செலுத்துவதை விட அவதானம் செலுத்துவது விவேகமானது என்பதையும் மெல்ல மெல்ல கண்களுக்குக் கற்றுத்தரும்.

வளைவுகளில் வேகமாக வருவாய் என நீலச் சீருடையினர் எதிர்பார்ப்பதில்லை எனினும் இறக்கங்களில் அவர்களுக்கு வருவாய் வேகமாக உள்ளது எனக் கருதும் சாரதிகளும் உளர்.

சில நிமிடங்களுக்கு முன்னதாக வேலைக்கு சென்றுவிடலாம் என்பதற்காக பல வருடங்கள் முன்பதாக 'வேளைக்கே' சென்று விடக்கூடாது என்பதில் எல்லோரும் எச்சரிக்கையாக இருத்தல் வேண்டும்.

வேகத்தைக் கட்டுப்படுத்த பொலிஸார் காதலுடன் காத்திருக்கும் சகல இடங்களும் இங்கு பதிவாகவில்லை என்பதுடன் இதே நிலைகளிலிருந்தே அவர்களது எதிர்கால நடவடிக்கைகளும் அமையும் என்தற்கும் எதுவித உத்தரவாதமுமில்லை என்பதனையும் கவனத்தில் வையுங்கள்.

* 404 North bound in morning rush hour
* Adeleide street east bound at Eastern
* Allen expressway north bound north of 401
* Allen express way south bound
* Avenue road south bound near Davenport
* Avenue road south of Lawrence Ave.
* Bathurst south bound 5 Blocks north of St.Clair
* Bayview just north of Lawrence
* Bayview north bound south of Steeles
* Bayview north of Eglinton past Broadway
* Birchmount yard-south 401
* Blackcreek drive and Lawrence northbound
* Bloor street bridge east of Oldmill and west of Jane
* Bloor via dust-both directions
* Brimley northbound over 401
* Donmills and Van horne
* Donmills southbound just past Wynford drive
* Dundas street west between Royal york and Islington
* Eglington avenue west just east of Leslie
* Esna park dr. in Cinionville between Woodbine and Steels
* Finch westbound, west of Donmills
* Gerrard street bridge eastbound between Broadview and River
* Greenwood between Danforth and Gerrard
* Keele both directions, just north of Bloor
* Kingston road westbound, justwest of Birchmount Stadium
* Lakeshore road westbound at Leslie street
* Lakeshore westbound after Strachan
* Lawrence westbound passing the DVP
* Lawrence eastbound west of Mildenhall
* McNicol between Middle field and McCowan
* Moore avenue west of Bayview
* Morningside avenue morthbound at Park entrance
* Ossington just north of College
* Pharmarcy and Wexford
* Parksie drive above lake shore
* Russel Hill road south bound after St.Clair
* Scarlett road south of St.Clair
* Steels both directions at Gorway
* Steels between Bayview and Leslie
* Steels east bound at York U. (Keele)
* Richmond and Eastern ave
* The East mall south bound at Cloverdale Mall
* Vewton road south bound north of Sheppard
* Willowdale south bound 2 blocks north of Finch
* Wilson east of Keele. Beside the Overpass
* Woodbine park and Lakeshore
* Yonge south bound at Heath
* Yonge Street north bound south of Merton
* York Mills road eastbound at Rirchwood

## 14வது அரங்காடல்

மனவெளி கலையாற்றுக் குழு வழங்கும் 14வது அரங்காடல், இவ்வாண்டு ஜுலை மாதம் 8ம் திகதி ஞாயிற்றுக்கிழமை, மார்க்கம் தியேட்டர் கலையரங்கில், பிற்பகல் 1 மணிக்கும், மாலை 6 மணிக்கும் இரு நிகழ்வுகளாக இடம்பெறவுள்ளது.

14வது அரங்காடலில், ஹரல்ட் பின்றரின் 'இப்பொழுதும் எப்பொழுதும்', பென்னேஸ்வரனின் 'ஹரி ஓம் நம', சிவமணியின் 'இரண்டுக்கும் நடுவே', ஆனந்தி சசிதரனின் 'நிறங்களின் நிஜங்கள்' ஆகிய படைப்புக்கள் மேடையேறவுள்ளன. இவற்றை முறையே துஷி ஞானப்பிரகாசம், புராந்தகன், இலங்கதாஸ் பத்மநாதன், ஆனந்தி சசிதரன் ஆகியோர் நெறியாள்கை செய்கின்றனர்.

தொடர்புகளுக்கு: 416 819 7923, 416 417 6933

# மார்பகப் புற்றுநோயின் மரபணு பரம்பரையில் மறைந்திருக்கும்

பெண்ணொருவரின் குடும்பத்தில் பல சிறிய தாய்மார்களும், மூத்த சகோதரிகளும் இருக்குமிடத்து, மரணத்தை ஏற்படுத்தக்கூடிய மார்பகப் புற்றுநோய் மரபணுவானது பரம்பரையில் மறைந்து விடக்கூடும். ஆனால் உண்மையில் அது தந்தை மூலமே காவப்பட்டு வந்திருக்கும்.

மார்பகப் புற்றுநோயுடைய ஆயிரக் கணக்கான பெண்கள் தமது நோய்க்கான பிழையான மரபணுக்களை பரிசோதித்து அடையாளம் காண்பதற்கும், மருத்துவ முடிவுகளை தெளிவுபடுத்திக் கொள்ளவும் சந்தர்ப்பம் வழங்கப்படுவதில்லை என ஒரு புதிய ஆராய்ச்சி சுட்டிக் காட்டுகின்றது.

இந்தக் கண்டுபிடிப்புகளை பிரதிபலிக்கும் வகையில், காப்பீட்டு நிறுவனங்கள் மரபணு பரிசோதனைக்கு வழங்கும் பணத்தினை தீர்மானிப்பதற்கான வரைய-றைகளை மாற்ற வேண்டும் என கலிபோர்னியாவிலுள்ள City of Hope Cancer நிறுவனத்தைச் சேர்ந்த டாக்டர் ஜெப்ரி வீஷல் தெரிவிக்கின்றார். பரிசோதனைக்கு கட்டணமாக 3,000 இற்கும் அதிகமான அமெரிக்க டாலர்கள் தேவைப்படும்.

மரபுரீதியாக வரும் மார்பகப் புற்றுநோய்களில் அரைவாசிக்கு மேற்பட்டவை பெண்ணின் தந்தையிடமிருந்தே பரம்பரையாக வருகின்றது, தாயிடமிருந்தல்ல. ஆனால் தந்தையின் சொந்தத்திலுள்ள பெண்களுக்கு இந்நோய் இல்லாவிடில், இந்த பிழையான மரபணு அடுத்த தலைமுறைக்கு அமைதியாகக் கடத்தப்பட்டு விடும், புற்றுநோயை ஏற்படுத்தாமலே. வீஷல் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், பொதுவாக மருத்துவர்கள் தந்தையின் வழியில் மரபணு ஆபத்து இருக்கின்றதா என்பதை கவனிப்பதில்லை என்கிறார்.

50 வயதுக்குட்பட்ட மார்பகப் புற்றுநோய் காணப்பட்ட 306 பெண்களின் மரபணு பரிசோதனை முடிவுகளிலிருந்து பெறப்பட்ட இவ் அறிக்கை அமெரிக்க மருத்துவ சங்க சஞ்சிகையில் வெளியிடப்பட்டுள்ளது.



குயின்ரஸ் துரைசிங்கம்

**கணினிப் பக்கம்** 13

# காக்க காக்க கணினி காக்க...

1889ல் அமெரிக்க கண்டுபிடிப்பாளரான ஹேமன் ஹொலறித் என்பவர், இந்த நினைவகப்படுத்தல் முறையை அடியொற்றி, தனியான நினைவுத்தொகுதி கொண்ட புதிய இயந்திரமொன்றை அறிமுகம் செய்தார். இதிலே, ஒருமுறை தட்டினால் இலக்கமாகவும், இருமுறை வேகமாகத் தட்டினால் எழுத்தாகவும் வரும் வகையில் இவர் சில சுட்டிகளை (buttons) அமைத்திருந்தார். இயந்திரத்தினுள் இருக்கும் பதிவு அட்டையில், தட்டச்சு செய்கின்ற எழுத்துக்கள் அல்லது இலக்கங்கள் சேமிக்கப்பட்டு, தேவைப்படும்போது, சரியான கணித்தல் செய்யப்பட்டு, வெளியே எடுத்துப் பயன்படுத்தும் வகையில் இது அமைக்கப்பட்டது.

1896ல், ஹேமன் ஹோலறித் முதன்முதலில் ஒரு கணினி நிறுவனத்தை ஆரம்பித்தார். TMC (Tabulating Machine Company) என்ற பெயரில் உருவான இந்த நிறுவனமே, பின்னர் வேகமாக வளர்ச்சி கண்டதால், 1924ல், IBM (International Business Machines) என்ற பெயரில், கணினியுடன் தொடர்புடைய பல்வேறு நிறுவனங்களும் இணைந்து புதிதாக, ஒரு கூட்டு நிறுவனமாக உருமாற்றம் பெற்றது. இந்த 'பதிவு அட்டை' (punch card) முறையிலமைந்த கணினி இயந்திரமே, 1960கள் வரை பரவலான தகவல் பாவனையிலிருந்தது.

இதற்கிடையில், இரண்டாம் உலகப் போரின் போது, சில நாடுகள், தங்களது தனிப்பட்ட இலத்திரனியல் படிம வளர்ச்சியை, இரகசியமாக போர் வியூகத்தினுள் சேர்க்க விரும்பின. இதனால், ஜேர்மன் பொறியியலாளரான கொன்றாட் ச்சூஸ் என்பவர், விமானங்கள் மற்றும் ஏவுகணை வடிவமைப்பிற்கு கணினி முறையைப் பயன்படுத்தினார். அமெரிக்காவிலும், ஹவாட் அய்க்கென் என்பவர், இலத்திரனியல் ரீதியான சிறந்த கணிப்பொறி இயந்திரத்தைக் கண்டறிந்து, அமெரிக்க கடற்படை யுக்திகளுக்கு பயன்படுத்த வழிகண்டார்.

இவையெல்லாம் நடைபெற்றாலும், இதுவரை உருவாக்கப்பட்ட கணினி இயந்திரங்களின் அளவு மட்டும், மாற்றமடைந்ததாக இல்லை. கிட்டத்தட்ட நம்ம ஊர் உளவு இயந்திரம் போன்று இருந்திருக்குமா என்று நீங்கள் கேட்கலாம். தற்போது பாவனையிலுள்ள கணினியுடன் ஒப்பிட்டால், உழவு இயந்திரம் பெரியது தான். ஆனால், அப்போது பயன்பாட்டில் இருந்த கணினி இயந்திரம், கிட்டத்தட்ட தற்போதைய உலகக்கோப்பைப் போட்டிக்குப் பயன்படுத்தப்படும் உதைபந்தாட்ட மைதானத்தின் அளவை ஒத்ததாக இருந்தது என்பது எமக்கு ஆச்சரியமளிக்கும் உண்மை.

இறுதியில், அமெரிக்கர் உருவாக்கிய மிகச்சிறிய கணினியாக, உதைபந்தாட்ட மைதானத்தின் பாதி அளவில் ஒரு கணினி உருவானது. பார்க்கும் போது, ஒரு தொழிற்கூடம் போன்று காணப்படும் இந்த கணினி, பாரிய குழாய்கள், இயந்திரங்கள், தொழில்முறைகளுடன் கூடியதாக, 500 மைல் நீளமுள்ள வயர்கள் பொருத்தப்பட்ட ஒன்றாக இருந்தாலும், ஏராளமானவர்கள் போதிய காலமெடுத்து செய்து வந்த கணித்தல் வேலைகளையும், சிக்கலான கணித்தல்களையும், மிக இலகுவாக கணித்து வழங்கி மிகப்பெரும் உதவி புரிந்தது.

கணினி இயந்திரத்தின் அளவை சிறிதாக்குவதற்காக பிறப்பெடுத்ததுதான் 'நினைவு அட்டை' முறை. பதிவு அட்டையிலிருந்து 'நினைவு அட்டை' (memory card) முறைக்கு இலத்திரனியல் உலகம் நகர்ந்து சென்றபோது, கணினியுலகமே புதுப்பிறப்பெடுத்திருப்பதை அவதானிக்க முடிகிறது.

*எம்மைச் சுற்றி நடப்பவைகளிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட சில சம்பவங்களைக் காய்தல் உவத்தலின்றி எழுதும் இந்தப் பத்தி (column). அவ்வப்போது வெளிவரும். கண்டவை, கேட்டவை, நடந்தவையே இதன் மூலாதாரம். ஒருவகையில் பார்த்தால் இதுவும்கூட தகவல்தான்.*

# இது எப்பிடி இருக்கு?

## திரைப்படங்களை இப்படியும் எடுக்கலாம்!

ரொறன்ரோவில் புதுவகையாகத் திரைப்படங்கள் எடுக்கப்படுகின்றனதாம்.

கையில் கதை; நான்கு பாடல்; ஒரு கமரா. 'பசை'யுள்ள வாட்டசாட்டமான 'பிசினஸ்' புள்ளி ஒருவரை வைத்துச் சில காட்சிகள் ஒளிப்பதிவு, சில மாதங்களின் பின்னர் அக்காட்சிகள் அவருக்குத் தனியாக போட்டுக் காண்பிக்கப்படும்.

சினிமாவில் தன்னைப் பார்த்து 'ஐஸ்' ஆகிய அந்தப் புள்ளி பலருக்கும் தமது நடிப்புப் பற்றி விளாசி விடுவார்.

சில மாதங்களின் பின்னர், "படம் முக்கால்வாசி முடிந்து விட்டது. இன்னும் 'இரண்டு தட்டு' (பத்தாயிரம் டாலர்) இருந்தால் படத்தை முடித்துவிடலாம்" என அந்தப் புள்ளியிடம் கதை விடப்படும்.

தாம் நடித்த படம் விரைவில் வெளிவரவேண்டுமென்ற அவாவில், பத்தாயிரம் கைமாறும். சில வாரங்களில் தயாரிப்பாளரின் தொலைபேசி இலக்கமும் மாறிவிடும்.

அச்சமயன்ம அவர் இன்னொரு 'புள்ளி'யுடன் மற்றொரு திரைப்படத்துக்கு ஒளிப்பதிவு செய்து கொண்டிருப்பார்.

## நிலவொளி காலங்களில் கூடிய பொலிசார் சேவை

நிலவொளி (பௌர்ணமி) காலங்களில் கூடிய பொலிசார் லண்டனில் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

இந்தக் காலங்களில் அதிகமானவர்கள் குற்றச் செயலில் ஈடுபவதே இதற்குக் காரணம் என்று பிரித்தானிய நகரப் பொலிஸார் கூறுகின்றனர்.

தமிழர்கள் 'கனத்த' நாட்களில் தீய சம்பவங்கள் நடைபெறுமென்று சொல்லி, பல வேலைகளையும் ஒத்தி வைப்பது போன்றதே இது என்கிறார் அங்குள்ள ஒரு மனநோய் வைத்தியர்.
கனடாவில் பேய்-பிசாசுகள் நாள் என்று 'ஹலோவின்' தினக் கொண்டாட்டம் நடைபெறுவது போல, பிரித்தானியாவில் நிலவொளி நாள்.

மூடக் கொள்கைகள் பலவிதம்;
இடத்துக்கு இடம் வேறுவிதம்!

## தயாநிதி தமிழ்ப் பெயரா? இல்லை என்கிறார் மு.க

தமிழகத்தில் தமிழ் அழிவு நிலைக்கு வந்துள்ளதற்கு தமிழகத்திலுள்ள தொலைக்காட்சிச் சேவைகளே காரணம் என்று சாடியுள்ளார் மு. கருணாநிதி.

சென்னையில் இடம்பெற்ற பகிரங்க வைபவமொன்றில் இப்படிக் கூறி 'சன் டிவி'க்கு ஒரு 'தடவல்' நடத்தியுள்ளார் கருணாநிதி.
நல்ல தமிழ்ப் பெயர்களை உங்கள் பிள்ளைகளுக்குச் சூட்டுங்கள் என்று இங்கு வேண்டுகோள் விடுத்த இவர், தமிழல்லாத பெயர்கள் சிலவற்றையும் இங்கு சுட்டிக் காட்டினார். இவற்றுள் ஒன்று தயாநிதி என்ற பெயர்.

கருணாநிதியின் சொந்த மருமகன் மாறனின் மகன் தயாநிதி. அண்மையில் அமைச்சர் பதவியிலிருந்து இவரை நீக்கியவர் கருணாநிதி.

இந்நாள் வரை தயாநிதி என்ற பெயர் தமிழல்ல என்பது முதலமைச்சர் கருணாநிதிக்குத் தெரியாமல் போனது எவ்வாறு?
அல்லது, கழுத்தறுப்பதற்காகக் காலம் கனிந்து வரும்வரை காத்திருந்தாரா?

தன்னை ஏற்றிய குதிரையையும் (சன் டி.வி), தான் வளர்த்த குதிரையையும் (தயாநிதி) தருணம் பார்த்துப் பொறி வைக்கிறார் இந்தப் 'பெரிய' மனிதர்.

பழி வாங்குவதும் பலியெடுப்பதும் இவரது கைவந்த கலைகளாம்!

**உதாசனன் உலா விருந்து**

## எஸ்.எஸ்.சி சோதனையும் பல்கலைக் கழகமும்

ரொறன்ரோவில் அண்மையில் நடைபெற்ற பொது நிகழ்ச்சியொன்றில், ஐம்பதைத் தாண்டிய ஒருவர் உரையாற்றினார்.

இலங்கையில் தரப்படுத்தல் கொண்டுவரப்பட்டதால் தாம் பல்கலைக் கழகம் செல்ல முடியாது போனதாகக் கூறி ஆதங்கப்பட்டார.

இதே ஆள் இரண்டு வருடங்களுக்கு முன்னர் பாரதி பெயரிலான ஒரு கலைத்துறை அமைப்பின் விழாவில் பேசும்போது, "எஸ்.எஸ்.சி என்றொரு பரீட்சை இல்லாதிருந்தால் தம்மால் இலகுவாகப் பல்கலைக் கழகம் சென்றிருக்க முடியும்" என்று சொன்னது நன்றாக ஞாபகமிருக்கிறது.

இதில் எது உண்மை? எது பகிடி? எல்லாம் அந்த ப் பிள்ளையாருக்கே வெளிச்சம்!

## நூல் வெளியீட்டுக்கு பேச்சுத் தயாரிப்பு

ஓய்வுபெற்ற ஆங்கில ஆசான் அவர். அவரது நூலொன்றின் வெளியீட்டு விழா ஏற்பாடாகியிருந்தது. தமக்குத் தெரிந்த முன்னாள் கல்வி அதிகாரி ஒருவரையும் பேசுமாறு கேட்டிருந்தார். அவரும் சம்மதித்தார்.


விழா நடைபெறுவதற்கு முதல் நாள் பேச்சாளரை அணுகிய நூலாசிரியர் ஒரு கடித உறையை வழங்கினார். "உங்களுக்கான பேச்சு உள்ளே தயாராக இருக்கிறது" என்று கூறிவிட்டு அவர் போய்விட்டார். பேச்சாளருக்குத் தலையைச் சுற்றியது. விழாவுக்கு அவர் செல்லவில்லை.

அடுத்த வாரப் பத்திரிகை ஒன்றில் விழாத் தொகுப்பு பிரமாதமாக வந்திருந்தது. நூலாசிரியரைப் பலரும் பாராட்டிய உரைகள் அச்சொட்டாக வந்திருந்தன.

'மூலமந்திரம்' தெரிந்த முன்னாள் கல்வி அரிகாரி பத்திரிகையைப் படித்து தமக்குள் சிரித்துக் கொண்டார். உண்மையை எங்கும் சொல்ல முடியாத திரிசங்கு நிலை!

## ரொறன்ரோவிலிருந்து ஒட்டாவா

# மயூரனும் நண்பர்களும் நடை பயணம்




# Mayuran and friends walk to correct 'Errorism'

A new brand of politically active Canadian Tamil youths are seeking innovative new outlets to express their political message, and to capture the attention of local media. Social networking sites including YouTube, and Facebook have become key electronic arsenal youths have marshalled to promote political themes and to invite other youths to join action groups. Groups employ well-organized public relations efforts including marathon-walks through cities to attract attention of the local media, law enforcement authorities and politicians.

The increasing numbers of technocratic Tamil nisei (second generation) in Canada, products of popular Canadian universities including Universities of Toronto, Carleton, Ryerson and others, are emerging as a potent force in political advocacy in support of the Tamils in Sri Lanka.

Building on the organizational strength and peer support from campus student organizations, the Canadian youths are branching out into mainstream political activism. In a recently concluded campaign, an active youth group organized a walkathon from Toronto to Ottawa, through many Canadian townships, met with the RCMP [Royal Canadian Mounted Police] officials and conducted a press briefing at the Parliament Hill to the mainstream media.



## Canadian Tamil Youths speakout


"The group is hoping that awareness will create dialogue between the Canadian government and Tamil Eelam. They have set up a Facebook group on the Internet and it already has more than 600 members who are contributing comments and words of encouragement to the young men," Durham region News reported.

Students from Toronto travelled in a chartered bus to support the student group on June 11th, and Universities of Ottawa, Carleton students attended in large numbers at Parliament Hill for the final day event to celebrate the "International Student uprising day." Students marched across Governer General's house and Prime Minister Harper's house slanting slogans reflecting their rights to bring the reasonableness of Tamil struggle known to Canadians, spokesperson for the group told the media. In the US, "People for Equality And Relief in Lanka (PEARL)," a political action group formed by Tamil American youths, have been active in the US for the past three years. The group has developed an effective strategy to organize letter writing campaigns to influence US Policy makers.

The group is "dedicated to promoting a fair and balanced perspective of the conflict in Sri Lanka, providing U.S. policymakers with the often-obscured truth of the situation there, organizing constituents to more effectively foster positive change, and inspiring political and moral courage in consideration of the conflict in Sri Lanka and the human rights atrocities committed there," the website says.

[TamilNet, Saturday, 16 June 2007]





மகாஜன அதிபர்
பொ. கனகசபாபதி

# திறந்தவெளி அரங்கில் சக்கடத்தாரின்...

'1970ம் ஆண்டிலே எமது பாடசாலையின் வைரவிழா வருகிறது. எமது பாடசாலையின் பொன் விழா நினைவாக ஒரு மண்டபம் எழுப்பியுள்ளோம். அதே போன்று வைரவிழா நினைவாகவும் ஒரு மண்டபம் நிறுவுவோம். அதற்கான நிதி சேகரிப்பின் ஆரம்பமாக இந்த நாடகத்தைப் போடுவோமா' எனக் கேட்டேன். அவருக்கு அது மிகவும் பிடித்துப் போய்விட்டது. 'நல்ல எண்ணம். அப்படியே செய்வோம்' என்றார். வேகவேகமாக செயற்பட்டோம். தெல்லிப்பழைச் சந்தியினை மையமாக வைத்து நான்கு பகுதிகளாகப் பிரித்தோம். சந்தியின் கிழக்கே இடப்புறமுள்ள பகுதிக்கு நான் தலைமை ஏற்றேன். அதே போன்று வலப்புறம் உள்ள பகுதிக்கு திரு சத்தியசோதம். சந்தியின் மேற்கே இடப்புறத்திற்கு சிவசுப்பிரமணியம். வலப்புறத்திற்கு திரு முருகையா என மகாஜனாவின் பொற்காலத்தின் தூண்களில் முக்கியமான சிலர் தலைமை ஏற்றனர். அந்த அந்தப் பகுதியில் உள்ள மாணவர் தலைவர்கள், சிரேஷ்ட மாணவர்களைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டது. மாலை வேளைகளிலும், சனி ஞாயிறுகளிலும் பிரவேசச் சீட்டுக்கள் விற்கப்பட்டன. ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமை காலை விளம்பரப் பலகையில் ஒவ்வொரு குழுவினரும் விற்ற சீட்டுக்களின் பணத் தொகையினை எழுதி விடுவேன். இது ஒரு பொறாமை அற்ற போட்டியாக வந்தமையால் மாணவர்களும் போட்டி போட்டுக் கொண்டு பிரவேசச் சீட்டுக்களை விற்றனர். இதில் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களும் வீடு வீடாக மாணவர்களுடன் சென்ற காரணத்தால் பெற்றோர்களுடன் நிறையவே கலந்துரையாடி பாடசாலை பற்றி அவர்களின் கணிப்பு ஆசிரியர்களின் செயற்பாடுகள் செய்யப்பட வேண்டிய திருத்தங்கள் பற்றி நேரடியாகவே அறிந்து கொள்ள முடிந்தது. இந்த நாடகம் பார்ப்பதற்கான பணமேயன்றி வைரவிழாக் கட்டிடத்திற்கான நிதி உதவியல்ல, அதற்குப் பெற்றோர்களின் உதவி தாராளமாகத் தேவைப்படும். எனவே பின்னர் அதற்காக மீண்டும் பெற்றோர்களை வந்து சந்திப்போம் என்பதை வலியுறுத்தினோம். பிரவேசச் சீட்டுக்களின் கட்டணப்படி அவர்கள் எத்தனை எடுக்கிறார்களோ அத்தனைக்கும் இப்போ பணம் தந்தால் போதுமென்பதை வலியுறுத்தினோம். எமது முயற்சி அபார வெற்றியாக அமைந்தது. 2,000,00 ரூபாவிற்கும் அதிகமாகச் சேகரிக்க முடிந்தது. தந்தை செல்வா அவர்களை பிரதம அதிதியாக அழைத்திருந்தோம். ரூபா 100,00 தந்துதவினார்.

ஆனால் இராஜரத்தினத்தின் ஆசைப்படி துரையப்பா பிள்ளை மண்டபத்தில் நாடகத்தை வைகக முடியாத அளவினுக்கு கூட்டம். ஆகவே மகாஜனாவின் திறந்த வெளி அரங்கிலே தான் நாடகம் நடத்த வேண்டி வந்தது. "ஆச்சிக்குச் சொல்லாதே" என்ற நகைச்சுவை நாடகம் என எண்ணுகிறேன். பார்வையாளரைக் குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைத்த நாடகம். இராஜரத்தினத்தின் நடிப்பு எல்லோரையும் கவர்ந்தது. நான் பின்னர் அதிபராக இருந்த போதும் அவர் பாடசாலை வந்து சில நகைச்சுவைக் காட்சிகளை நடித்துக் காண்பித்து மாணவர்களை மகிழ்விப்பதுண்டு. கல்லூரியின் மேற்குப் புறத்திலே ஒரு நீளமான கிடுகினால் வேயப்பட்ட கொட்டில் ஒன்று இருந்தது. அது ஆறு வகுப்பறைகளைக் கொண்டது. ஒன்பதாம் பத்தாம் வகுப்புகள் அக் கொட்டிலிலேயே இருந்தன. அக்கொட்டிலின் தளம் சீமெந்து போடப்பட்டதுடன் சுற்றுச் சுவர்களும் கற்சுவர்களாகவே இருந்தன. இந்தக் கொட்டிலை தகர்த்து அங்கேயே வைரவிழாக் கட்டிடத்தினை நிறுவுவதாகத் திட்டமிட்டோம். கல்லூரியில் எப்போதுமே வகுப்பறைப் பற்றாக்குறை தீராத பிரச்சனையாகவே இருந்து வந்துள்ளது. ஆகவே ஆறு வகுப்பறைகளையும் தகர்த்தால் வகுப்பறைகளுக்கு என்ன செய்யலாம் என்ற வினா எழுந்தது. பிரதம பகுதிக்குப் பிற்புறத்திலே ஒரு வெற்றிடம் இருந்தது. எனவே இங்கே தகர்த்த அத்தனையையும் அங்கு கொண்டு போய் மீண்டும் தற்காலிக கொட்டில்கள் போடுவோம் எனத் தீர்மானித்தோம். தகர்த்து அங்கு கொண்டு போய்க் குவிக்கின்ற வேலைகள் அத்தனையையும் மாணவர்களே சிரமதான முறையில் செய்தனர். உயர்தர மாணவர்கள் எனது தலைமையிலும் முருகையா தலைமையிலும் பணியாற்றினர். முருகையான மிகவும் பிரபலமான கணித ஆசிரியர். அவரது கணித மாணவர்களுக்கு அவர் வாக்கு கடவுள் வாக்கு என்று கூறினால் மிகையாகாது. முருகையாவின் நடவடிக்கைகளில் சிறிது முரட்டுத்தனம் மிளிரும். அவர் எவ்வழியோ அவர் மாணவர்களும் அவ்வழி. அதிபருக்கோ அவரின் செயற்பாடுகள் சில சமயங்களில் வயிற்றைக் கலக்கும். சுவரை இடிக்க வேண்டும். நாம் மெல்ல எப்படி வீழ்த்துவது எனத் தீர்மானிப்பதற்கு முன்னரே முருகையா 'புள்' என்பார். அவரது மாணவர்கள் ஒரே இழுவை. சுவர் தரையில் கிடக்கும். யாருக்காவது அடிபட்டால் என்ன செய்வது என்ற கிலி அதிபருக்கு. அதிபர் திகைத்து நிற்பார். கவனம், கவனம் என்று அவர் சொல்வதைக் கவனிக்க முருகையாவோ அவரின் சீடர்களோ செவி சாய்த்தால் தானே! ஒருவித விக்கினமும் இல்லாமல் சிரமதானம் முடிவுற்றது. அதிபரும் நிம்மதியாக மூச்சு விட்டார். அத்திவாரம் இட்டதையும் விழாவாகக் கொண்டாடினோம்.

சில நாட்களின் பின்னர் சுழிபுரம் இராஜசுந்தரம் அவர்களது இல்லத்தில் ஒரு இரவு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக அப்போது இருந்த T.B. சுபசிங்காவும், K.B. இரத்தினநாயகாவும் வந்திருப்பதாகவும் சந்திக்க வருமாறும் அழைத்திருந்தனர். நானும் திரு முருகையாவும் போயிருந்தோம். தோழர் வி. பொன்னம்பலமும் வந்திருந்தார். முருகையா ஆரம்பத்தில் Dr. N.M பெரேராவின் L.S.S.P யில் உறுப்பினராக இருந்து பின்னர் அவர்கள் ஸ்ரீமாவோவின் ஆட்சிக் காலத்தில் அம்மையாருடன் சங்கமித்ததன் விளைவாக கட்சியை விட்டு வெளியேறிய எட்மண்ட் சமரக்கொடியுடன் வெளியேறி அவரது அனுதாபியாக இருந்தவர். சமரக்கொடி தேர்தலில் தோல்வி கண்டமையால் அவரது இயக்கமும் மெல்லச் செத்துவிட்டது. சந்திப்பின் போது பல விசயங்கள் பற்றிச் சந்தேகங்கள் கேட்டோம். தீர்த்தனர். அவர்களின் கருத்துக்கள் ஏற்கக் கூடியவையாக இருந்தன.

அப்போது ஐக்கிய தேசியக் கட்சியே ஆட்சியில் இருந்தது. அடுத்த ஆண்டில் தேர்தல் நடைபெற இருந்தது. இரண்டொரு நாட்களின் பின்னர் முருகையா என் வீட்டிற்கு வந்தார். தான் உடனடியாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் சேரப் போவதாகவும் என்னையும் சேருமாறும் அழைத்தார். நான் அவரைச் சமாளிப்பதற்காக நாம் இருவரும் 'எமது பாடசாலை வைரவிழா முடியுமட்டும் அரசியலில் தீவிரம் காட்டாமல் இருப்போமே, விழா முடிந்த பின்னர் இது பற்றிச் சிந்திக்கலாம் தானே' என்றேன். முருகையா எதிலுமே தீவிரம். நினைத்ததை உடனேயே செய்து விடுவார். ஆனால் ஒப்பற்ற நேர்மையாளர். நான் சொன்னது அவருக்குச் சாக்குப் போக்காகத் தெரிந்திருக்கலாம். எனவே, நீர் வேணும் என்றால் அப்படிச் செய்யும் நான் இப்பவே சேரப் போகிறேன் என்றார். சேர்ந்தும் விட்டார். அரசியலில் தீவிரமாக ஈடுபட்டார். அதற்காக அவர் கல்லூரிக்கு ஆற்ற வேண்டிய பணியையோ மாணவர்களுக்குக் கற்பிப்பதையோ நிராகரிக்கவில்லை. மிக்க திறமைசாலியான ஆசிரியர் என எல்லோராலும் பாராட்டப்பட்ட

(26ம் பக்கம் வருக)


# யாழ்ப்பாணச் சமூகத்தில் பெண் கல்வி - ஓர் ஆய்வு

## குறமகளின் ஆய்வு நூல் வெளியீட்டு விழா











ஒளிப்படங்கள்
கே. கமலலிங்கம்


எழுத்துலகில் பொன்விழாக் கண்ட மூத்த எழுத்தாளர் குறமகள் (வள்ளிநாயகி இராமலிங்கம்) அவர்களால் எழுதப்பெற்று கொழும்பில் குமரன் பதிப்பகத்தால் அச்சேற்றப்பட்ட 'யாழ்ப்பாணச் சமூகத்தில் பெண் கல்வி - ஓர் ஆய்வு' என்னும் நூலின் வெளியீட்டு விழா இந்த மாதம் 16ம் திகதி சனிக்கிழமை ஸ்காபரோ சிவிக் சென்டரில் கனடிய சட்டத்தரணி திருமதி தெய்வா மோகன் தலைமையில் நடைபெற்றது. பேராசிரியர் செல்வா கனகநாயகம் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்புரை நிகழ்த்தினார். மேர்ளின் இமானுவல், மைதிலி சோமசுந்தரம், கவிஞர் உ. சேரன் ஆகியோர் நூலை ஆய்வுரை செய்தனர். பெண் கல்வியை மேம்படுத்தும் இரண்டு அரங்க நிகழ்ச்சிகள் விழாவில் இடம்பெற்றன.. தென்னாசிய பெண்கள் நிலையத்தின் அனுசரணையுடன் விழா ஏற்பாடாகியிருந்தது. நூலாசிரியர் குறமகள் பதிலுரையும் ஏற்புரையும் நிகழ்த்தினார்.








# றொறன்ரோ கல்விச் சபை TDSB
# அனைத்துலக மொழிக்கல்வி கற்கைநெறி 30வது ஆண்டு நிறைவு விழா

றொறன்ரோ கல்விச் சபையானது, அனைத்துலக மொழிக்கல்வியின் கற்கைநெறியை ஆரம்பித்து முப்பது ஆண்டுகள் நிறைவைத் தொட்ட நிலையில், அதனை ஒரு நிறைந்த விழாவாக, கடந்த ஜுன் மாதம் 2ம் நாள் ஸ்காபரோ சிவிக் மண்டபத்தில் சிறப்பாகக் கொண்டாடியது. 52 மொழிகளில் 25,000 மேற்பட்ட மாணவர்கள் தமது தாய்மொழியைப் பயிலும் இக் கற்கைநெறியானது, கனடிய நாட்டின் பன்மைப் பண்பாட்டுக் கொள்கையின் சிறந்த அடையாளங்களில் ஒன்றாகும். இக் கற்கைநெறியின் 30 ஆண்டுகால வளர்ச்சியின் பரிணாமங்கள் பலவற்றை இந்த நிகழ்வு உணர்த்துவதாக அமைந்தது. பல சமூகங்கள் தமது சமூக அடையாளங்களைப் புலப்படுத்தும் காட்சிகளை அங்கு அமைத்திருந்தனர். அத்தோடு ஒவ்வொரு சமூகமும் தான் சார்ந்த இனத்தினது பண்பாட்டைப் புலப்படுத்தும் ஆடைகளைப் புனைந்து பல்லினப் பண்பாட்டு ஆடை அணிவகுப்பை நிகழ்த்தினர். புல இனங்களைச் சார்ந்த கலைநிகழ்வுகளும் மாணவர்களால் அரங்கேற்றப்பட்டன. தமிழர் சமூகம் அமைத்திருந்த தாயகக் கிராமக் காட்சி பலரது வரவேற்பைப் பெற்றது. தமிழர் சமூகப் பிரிவுக்கு கல்விச் சபையின் ஆசிரியரான கவிஞர் பொன்னையா விவேகானந்தன் பொறுப்பாக இருந்தார். இங்கு எடுக்கப்பட்ட சில ஒளிப்படங்கள் மேலே.

# விமல் சொக்கநாதனின் 'வானொலிக் கலை' நூல் வெளியீடு



மூத்த ஒலிபரப்பாளரும் இங்கிலாந்தில் பாரிஸ்டராகப் பணிபுரிபவருமான திரு. விமல் சொக்கநாதனின் 'வானொலிக் கலை' நூல் வெளியீடு கடந்த மாதம் தமிழகத்தில் நடைபெற்றது. விமலின் குருநாதர் முன்னிலையில் நடைபெற்ற இவ்விழாவில் தமிழகப் பிரமுகர் களுடன் எழுத்தாளர் மாத்தளை சோமு, உலகப்புகழ் ஒலிபரப்பாளர் அப்துல் ஹமீட் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# ஒன்ராறியோ மாகாண தன்னார்வத் தொண்டர் விருதுகள்

## Volunteers Build Communities - Ontario Awards










ஒன்ராறியோ மாகாண தன்னார்வத் தொண்டர் சேவைக்கான விருதுகள் வழங்கும் வைபவம் கடந்த மாத இறுதியில் ரொறன்ரோவில் இடம்பெற்றது. ஒன்ராறியோ முழுவதும் சுமார் 8000 பேருக்கு விருதுகள் வழங்கிய இறுதி நிகழ்ச்சியாக ரொறன்ரோ விருதுகள் வழங்கப்பட்டன. தமிழர் தகவலை வெளியிடும் தமிழர் தகவல் நிலையத்தின் சிபார்சில் இம்முறை ஏழு பேர் விருதுகளைப் பெற்றனர். றஞ்சி திருச்செல்வம் (15 வருடங்கள்), எஸ். பத்மநாதன் (10 வருடங்கள்), பொன்னையா விவேகானந்தன் (05), பொன். பாலராஜன் (05),






கேகைலிங்கம் கமலலிங்கம் (5) ஆகியோருடன் மாணவத் தொண்டர் விருதுகளை சாயிபிருந்தன் ராஜ்குமார், பிரியா குலசேகரம் ஆகியோர் பெற்றனர். விருதுகள் வழங்கும் ஒளிப்படங்களையும், அனைவரும் கூட்டாக அமைச்சு அதிகாரியுடன் நிற்பதையும், சாயிபிருந்தன் ராஜ்குமார் தமது பெற்றோருடனும், இவ்வைபவத்துக்கு என இலங்கையிலிருந்து வருகை தந்திருந்த தமது பாட்டன் பாட்டியான டாக்டர் நடராஜா தம்பதிகளுடன் நிற்பதையும் இங்கே காணலாம்.

(ஒளிப்படங்கள்: நளா & ராஜ்)










# வெற்றி முழக்கம் எழுப்பிய பெ





கனடியத் தமிழர்கள் கடந்த மாதம் 11ம் திகதி ஸ்காபரோ அல்பர்ட் காம்பல் சதுக்கத்தில் உணர்வு பூர்வமாக நடத்திய ‘வெ
கணக்கானவர்கள் இளையோர் முதியோர் என்ற வேறுபாடின்றி அணியணியாகத் திரண்டு வெற்றி முழக்கமிட்டு வெல்க த






# ாங்கு தமிழரின் வெல்க தமிழ்




அரங்க நிகழ்வில் 'மகிந்த' வந்தார்!


க தமிழ்' இந்தாண்டு கனடியத் தமிழர் இதுவரை நடத்திய நிகழ்ச்சிகளுக்குச் சிகரம் வைத்ததாக அமைந்தது. பல்லாயிரக் ழை வரலாற்றில் பதித்தனர். பொங்கு தமிழரின் வெல்க தமிழின் சில காட்சிகளை இங்கு ஒளிப்படங்களாகக் காணலாம்.













# ‘பண்பாடு - வேரும் விழுதும்’ நூல் வெளியீட்டு விழா








திரு. சுப்பிரமணியம் இராஜரத்தினம் அவர்களால் எழுதப்பட்ட ‘பண்பாடு - வேரும் விழுதும்’ ஆய்வு நூல் வெளியீட்டு விழா கடந்தமாதம் 24ம் திகதி கனடா கந்தசாமி கோவில் அலங்கார மண்டபத்தில் பிற்பகல் நடைபெற்றது. அதிபர் பொ. கனகசபாபதி விழாவுக்குத் தலைமை தாங்கி திறம்பட நடத்தினார். விழாவின் போது மேடையில் உரையாற்றியவர்களை இப்பக்கத்தில் காணலாம். மண்டபம் நிரம்பி வழிந்த (உண்மையாக) ஒரு விழாவாக இது அமைந்தது குறிப்பிடத்தக்கது.


யசோ சின்னத்துரை
கனடிய சட்டத்தரணி

வீடு
காணி
வர்த்தகச் சட்டம்

The Law Offices of
**Yaso Sinnadurai**
Barrister & Solicitor, Notary Public

REAL ESTATE LAW
RESIDENTIAL &
COMMERCIAL
BUSINESS LAW

**Tel: 416 265 3456** Fax: 416 265-2770

2100 Ellesmere Road, Suite 202, Scarborough ON M1H 3B7 (Markham & Ellesmere)



ரஞ்சி திரு

# சின்னச் சின்ன தகவல்கள்

பெரும்பாலான டாக்டர்களும் மருந்துச் சீட்டுகளில் மருந்துகளின் பெயர்களை வாசிக்க முடியாமல் கிறுக்கி எழுதுவதால், தவறான மருந்துகள் நோயாளர்களுக்கு வழங்கப்பட்டு பல ஆபத்துகள் ஏற்பட்டது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனால் மருந்துகளின் பெயர்களைக் கணினி மூலம் வழங்க ஆலோசிக்கப்பகின்றது,

கனடிய கடவுச் சீட்டு வழங்கலில் ஏற்பட்டிருக்கும் நீண்ட தாமதத்தைக் குறைப்பதற்கு, மேலதிகமாக 500 ஊழியர்களைப் பணிக்கமர்த்த கனடிய மத்திய அரசு ஏற்பாடுகளைச் செய்துள்ளது. அதேசமயம், தற்போது ஐந்தாண்டுகளுக்கு மட்டுமே செல்லுபடியானதாக இருக்கும் கனடிய கடவுச் சீட்டை பத்தாண்டுக்குரியதாக மாற்றவும் ஆலோசிக்கப்படுகின்றது.

மின்பாவனையைக் குறைக்க 'போனஸ்' திட்டமொன்றை ரொறன்ரோ ஹைட்றோ அறிவித்துள்ளது. இந்தக் கோடை விடுமுறையில் தமது மின்பாவனையைப் பத்து வீதத்தினால் குறைக்கும் குடியிருப்பாளருக்கு, அதன் பெறுமதியான பணம் போனஸாக வழங்கப்படவுள்ளது. மேலதிக தகவல்கள் www.torontohydro.com/summersavings இணையத்தளத்தில் உண்டு.

கனடாவின் முதியோர் தொகை 2040ம் ஆண்டில் பத்து மில்லியனை எட்டுமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. அப்போது, கனடாவின் சனத்தொகையில் இது 22,6 வீதமாக இருக்குமாம். 2021ம் ஆண்டில் முதியோர் தொகை தற்போதைய விட இரு மடங்காக அதிகரிக்குமெனவும் கணிக்கப்பட்டுள்ளது. கனடாவில் மனிதர் உயிர் வாழும் வயது அதிகரித்துச் செல்வது குறிப்பிடத்தக்கது.

ரொறன்ரோ நகரில் வீடுகளில் வளர்க்கப்படும் நாய்களுக்கும் பூனைகளுக்கும் லைசன்ஸ் எடுப்பதோடு, அதற்கான பட்டியை அவைகளில் கட்டியிருக்க வேண்டியது சட்டம். வருடாந்தம் இதனைப் புதுப்பிக்கவும் வேண்டும். தவறினால் அவைகளின் சொந்தக்காருக்குத் தண்டம். மேலதிக விபரங்களுக்கு 416 338 7387.

ஒன்ராறியோ மாகாணத்தில் அதிகரித்து வருகின்ற துப்பாக்கிக் கலாசாரத்தை ஒழிக்க, நான்கு அம்சத் திட்டமொன்று உருவாக்கப்பட்டுள்ளது. மேலதிகமாக ஆயிரம் பொலிஸாரை காவற்துறைக்குச் சேர்ப்பது இதில் முக்கிய அம்சம்.

வெப்பம் அதிகரித்து வருவதால் குளிரூட்டி இயந்திரங்களை அதிகளவில் அலுவலகங்களில் பாவித்தால், மின்செலவு அதிகரிக்கும் என அஞ்சப்படுகின்றது. இதனால் கோடை காலத்தின்போது அரச உத்தியோகத்தர்கள் ஜாக்கட்டுகள், கழுத்துப் பட்டிகள் (ரை) அணியத் தேவையில்லை என்று அரசு அறிவித்துள்ளது.

பொதுத் தொலைபேசிகளைப் பாவிப்பவர்கள் தற்போது அதற்காக ஐம்பது சதங்களைச் செலுத்த வேண்டும் ஆதலால் எப்போதும் 25 சதக் குற்றிகளை அனைவரும் வைத்திருக்க வேண்டும். இக்கட்டண அதிகரிப்பு வரப்போவது பற்றிக் கடந்த இதழில் குறிப்பிட்டிருந்தோம்.

ரொறன்ரோ போக்குவரத்துச் சபை (TTC) யின் வருமானம் திடீரென நான்கு வீதத்தினால் அதிகரித்துள்ளது. எரிபொருள் விலை உயர்வு, வீதிகளில் வாகன நெரிசல் போன்ற காரணங்களால் சொந்த வாகனங்களில் பயணிப்போர் தொகை குறைந்து வருகின்றது. வருவாய் அதிகரிப்பினால் மேலும் 100 மில்லயன் டாலரைச் செலவிட ரிரிசி முன்வந்துள்ளது.

இந்த வருடக் கோடை விடுமுறையின் போது பெருமளவிலான கனடியர்கள் வெளிநாடுகளுக்குப் பயணம் செய்யாமல், கனடாவுக்குள்ளேயே சுற்றுலா செய்யத் திட்டமிட்டுள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அமெரிக்காவுக்குப் பயணம் செய்வதிலுள்ள கடவுச் சீட்டுக் கெடுபிடியும், விமானப் பயணங்களில் அதிகரித்து வரும் அதிசோதனைகளுமே இதற்கான காரணமென்று செய்திகள் சுட்டிக்காட்டியுள்ளன.

கனடியப் பிரஜைகளில் அறுபது வீதத்துக்கும் அதிகமானவர்கள் பிரஜாவுரிமை (citizenship) பரீட்சைக்கான கேள்விகளுக்குப் பதிலளிக்க முடியாதவர்களாக இருப்பது அறியப்பட்டுள்ளது. பிறப்பினால் இவர்கள் கனடியப் பிரஜைகளாகியுள்ளனர். இவர்களுள் நான்கு வீதமானவர்கள் மட்டுமே கனடாவின் பிரதான அரசியல் கட்சிகள் நான்கினதும் பெயர்களைத் தெரிந்து வைத்துள்ளனராம்.

Heritage Education Funds
RESP
SAVINGS PLAN
கல்விச் சேமிப்புத் திட்டம்

Your are eligible to apply for and Education Savings Grant of up to $7,200 per child

Your savings are more safe and secure

Your can start with a small amount

it's a more flexible plan

EDUCATION IS A GREAT GIFT FOR YOUR FUTURE GENERATIONS

உங்கள் பிள்ளைகளின் கல்விக்கான சேமிப்பு உங்கள் எதிர்கால தலைமுறைக்கான முதலீடு

WWW.KERUDAVIL.COM

INCOME TAX PREPARATION

Personal Income Tax
Small Business Income Tax
Computerized Returns

Graphic Land - 647. 219. 7576



S.Ganthiy
B.A. Srilanka
Enrollment Officer

416. 841. 1866
416. 955. 9303
E.mail: ganthiy@rogers.com

# ரொறன்ரோ
# இரண்டாவது தமிழியல் மகாநாடு









ரொறன்ரோவின் இரண்டாவது தமிழியல் மாநாடு கடந்த மாதம் முதலாம் இரண்டாம் திகதிகளில் ரொறன்ரோ பல்கலைக் கழகத்தில் இரு தினங்கள் நடைபெற்றது. பல்வேறு நாடுகளிலிருந்தும் வருகை தந்த தமிழ்த்துறையாளர்கள் இதில் பங்குபற்றினர். கிழக்கிலங்கை பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் சித்திரலேகா மௌனகுருவும், பேரானைப் பல்கலைக் கழக சித்தார்த்தன் மௌனகுருவும் இலங்கையைச் சேர்ந்தவர்கள். முதலாவது தமிழியல் மாநாட்டுக் கட்டுரைகள் ஒரு தொகுப்பு நூலாக இங்கு வெளியிடப்பட்டது பேராசிரியர் செல்வா கனகநாயகம், பேராசிரியர் உ. சேரன், தர்ஷன் அம்பலவாணர் ஆகியோர் மாநாட்டு இணைப்பாளர்களாகப் பணியாற்றினர் இரண்டாம் நாள் அமர்வின் சில காட்சிகளை இங்கு காணலாம். (ஒளிப்படங்கள்: கருணா)






FUTURE WAY
FINANCIAL SERVICE INC.

**Mortgage & Re-Financing**

- Mortgage Insurance ஈட்டுக்கடன் காப்புறுதி
- Permanent Life Insurance நிரந்தர ஆயுட்காப்புறுதி (10, 20 வருடத்தில் கட்டி முடிக்கலாம்)
- Critical Illness கடுமையான நோய் வருமுன் காக்கும் காப்புறுதி (வாழும் போதே காப்புறுதியின் பயனைப் பெறலாம்)
- Non Medical Life Insurance வைத்திய பரிசோதனையற்ற காப்புறுதி
- Travel Insurance பிரயாணக் காப்புறுதி
- R.R.S.P. ஓய்வூதிய சேமிப்புத் திட்டம்
- R.E.S.P. சிறுவர் கல்வி சேமிப்புத் திட்டம் (அரச மானியம் 20%-40% + எமது நிறுவனம் வழங்கும் 15% மேலதிக கொடுப்பனவு)

பல்வேறு முன்னணி நிறுவனங்களிடமிருந்து தெரிவு செய்யப்பட்ட மிகக்குறைந்த கட்டணத்தில் உங்கள் குடும்ப வருமானத்திற்கேற்ப காப்புறுதி செய்து தரப்படும்
www.bank24.ca

*Compare Our Guaranteed 10 year Renewable Rates for your self*

| Age | 100,000 | | 250,000 | | 500,000 | |
|---|---|---|---|---|---|---|
| | Male | Femal | Male | Female | Male | Female |
| 30 | 11.16 | 9.00 | 18.00 | 13.28 | 27.00 | 18.00 |
| 35 | 11.16 | 9.81 | 19.35 | 15.53 | 28.35 | 22.05 |
| 40 | 13.86 | 11.70 | 23.40 | 19.35 | 39.50 | 28.35 |
| 45 | 17.46 | 13.95 | 33.53 | 24.53 | 58.05 | 39.60 |
| 50 | 23.22 | 18.45 | 46.58 | 35.33 | 86.50 | 59.85 |

Source: Life guide January 2007

Non smoker Monthly Rates. Rates may vary depending on health

7100 Woodbine Ave., Suite 101, Markham, ON, L3R 5J2 (Steele and Woodbine)

**Direct: 416.803.6500**

Please Note: Advertising companies no soliciting

**Are you tired of paying too much for your insurance?**



Canada Life

*Investment, insurance & Financial Advisor*

**Haran Thava**



*சிந்தனைப் பூக்கள்* 13

எஸ். பத்மநாதனின் தொடர்

# சிட்டுக்களே வாருங்கள்!

உங்களுக்காக பல சிந்தனைகளை சிந்தித்த வண்ணம் இருப்பது மகிழ்ச்சியாக இருக்கிறது. எப்படியோ ஒரு எண்ணக் கரு வந்து விடுகிறது. சிட்டுக்களாகிய உங்களுக்கு உள்ள பல்வேறு பிரச்சனைகளையும் பெற்றோர்களுக்கும் கூறி விட வேண்டிய தேவை ஏற்பட்டு விடுகின்றது.

நீங்கள் பாடசாலையில் படிப்பது பற்றியும் சிலவேளைகளில் உங்கள் ஆசிரியர்கள் நினைப்பது பற்றியும் மாமாவுக்கு நிறையவே கூற இருக்கிறது. அதற்காக நீங்கள் மனம் புண்படாது உங்கள் பெற்றோர்களுக்கும் எடுத்துக் கூறுங்கள்.

அறிவான சிட்டுக்களே! நீங்கள் பாடசாலையில் என்ன செய்கின்றீர்கள்? என்பது பற்றி பெற்றோர்கள் அறிவது குறைவாகவே உள்ளதாக ஆசிரியர்கள் அபிப்பிராயம் கூறுகின்றனர். இதனைப் பரிசோதிக்க மாமா முதலில் பெற்றோர்களிடம் அவர்களது சிட்டுக்கள் பற்றி விசாரித்தார்.

சிலருக்கு தங்கள் சிட்டுக்கள் என்ன வகுப்பில் படிக்கின்றார்கள் என்பது பற்றித் தெரியவில்லை! சில அப்பாக்கள் அம்மாக்களிடம் கேட்டுத்தான் பதில் சொன்னார்கள். அந்த அளவுக்கு இரண்டு வேலையும், பில் கட்டும் சுமைகளும் அவர்களை அழுத்தி வருகிறதோ தெரியவில்லை!

சில இடங்களில் அம்மாக்களும் தடுமாற்றம் கொண்டு பதில் சொன்னார்கள். எனவே தான் புரிந்து கொள்ள முடிந்தது தங்கள் சிட்டுக்களின் வகுப்புக்கள் பற்றி பலர் அக்கறை கொள்ளவில்லை என்பதாகும்.

ஆசிரியர்களிடமும் மாமா கதைத்துப் பார்த்தார். அவர்கள் கூறியது இன்னும் சற்று வேதனை அளித்தது. பாடசாலைக்கு பெற்றோர்கள் வருவது குறைவு. சிட்டுக்கள் வருகை தராதவிடத்து தொடர்பு கொண்டால் சரியாக பதில் வருவதில்லை. சிலருக்கு அடிக்கடி தொலைபேசி இணைப்பு இருப்பதில்லை. முக்கியமாக பெற்றோர்களுக்காக நடைபெறும் “Parents night or Parents day” போன்றவற்றிலும் கலந்து கொள்வதில்லை. இதனால் தங்களுக்கு பாதிப்பு இல்லை ஆனால் சிட்டுக்களுக்கு ஏற்படும் என்றனர்.

இவை போன்ற பதில்களை கேட்க கவலை ஏற்படுகிறது. உங்கள் சிட்டுக்களை பாடசாலைக்கு அனுப்பி விட்டால் போதாது. அவர்களது சகல நிகழ்வுகளிலும் பங்கெடுப்பது முக்கியமாகும்.

சிட்டுக்களே! உங்கள் பெற்றோர்களை நீங்கள் எப்படியாவது பாடசாலைக்கு முக்கிய விடயங்களில் கலந்து கொள்ள தூண்டுங்கள். உங்கள் படிப்பு திறமைகளை, ஆசிரியர் அதிபர்களின் குணநலன்களை அடிக்கடி அவர்களின் காதுகளில் போட்டு வையுங்கள். எங்களுக்காக அதிகம் உழைப்பது மட்டுமல்ல எங்களை மகிழ்ச்சிப்படுத்துங்கள் என்று கூறுங்கள்.

ஒரு பாடசாலை என்பது முக்கோண அமைப்புள்ளது. பெற்றோர் பிள்ளைகள் அதிபர் ஆசிரியர்கள் எல்லோரையும் இணைப்பது என்பதனை பெற்றோர்களுக்கு நினைவுபடுத்துங்கள். இதனை தொடர்ந்து செய்து பாருங்கள் அவர்கள் மகிழ்ந்து போவார்கள்.

The Law office of
GARY
Anandasangaree

416 321 1100

Gary Anandasangaree
Barrister and Solicitor

10 Milner Busines Court
Suite: 210
Toronto, ON. M1B 3C6

Phone: 416 321 1100
Fax: 416 321 1107
gary@galaw.ca



# Dr. Shan A. Shanmugavadivel & Associates

## டாக்டர் அ. சண்முகவடிவேல்

* Orthodontics * Implants * Cerec Crowns

பற்களை ஒழுங்கு செய்தல், 'இம்பிளான்ற்'
சிகிச்சைகளில் கனடாவில் பயின்ற பல வருட
அனுபவமுள்ள குடும்ப பல் வைத்தியர்.

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**

**2466 Eglinton Avenue East, Unit:7**
**Scarborough, Ontario. MIK 5J8**
Monday to Saturday
Near Kennedy Subway (Rainbow VillageBuilding)

**(416) 266 5161**

**Main Square Dental Office**

7-2575 Danforth Avenue
Toronto, Ontario. M4C 1L5
Mon, Tues, Wedn, Thurs, Fri, Sat & Sun
Near Main Subway
Dr. Shan - (Wedn), Dr. Kalaichelvan (Thurs & Sun)
(Free consultations on alternate Sundays)

**(416) 690 0121**



# UNEMPLOYED?

**Are You Receiving EI...?**
**Contact Us for HRDC Funding Details**

*Employers need skilled people in*


- Early Childcare Assistant (ECA)
- Computerized Accounting
- A+ (Computer Assembly & Repair)
- Network Engineering
- Personal Support Worker (PSW)
- Business Administration
- QA/Software Tester

**job** ready in 3 -6 months

**Kennedy & Sheppard**
(North East Corner)
301 - 2347 Kennedy Road
Tel: **416-321-9911**

**Computek College** of
**BUSINESS • HEALTH CARE • TECHNOLOGY**

**Kennedy & Eglinton**
(Above Public Library)
248 - 2390 Eglinton Ave. E.
Tel: **416-285-9941**



எஸ். காந்தி 11

# வெள்ளிப் பணம் - டாலர்

வெள்ளிப்பண தொடரில் இம்முறை கனடா அரசாங்கத்தால் வழங்கப்படும் கல்விச் சேமிப்புத் திட.டத்துக்கான மானியங்கள் பற்றி குறிப்பிடுவதாக சென்ற மாத இதழில் குறிப்பிட்டு இருந்தோம். Canada Education Saving Grant என்னும் மானியம் 1998ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தின் போது அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்த திட்டத்தின்படி 1998ம் ஆண்டு தை மாதத்தில் இருந்து கல்விச் சேமிப்புத் திட்டத்தினை மேற்கொள்ளும் பிள்ளைகளுக்கு அரசாங்கம் 20 சதவீத மானியம் கொடுப்பதாக அறிவித்தது.

அதாவது பெற்றோர்கள் பிள்ளைகளுக்காக எந்த நிதி நிறுவனத்திலோ கல்விச் சேமிப்புத்திட்டத்தினை ஆரம்பித்து வருடம் $2,000 வெள்ளிப் பணத்தினை சேமிக்கும் போது அரசாங்க மானியமாக $400 டாலர்கள் கிடைக்கும். மானியம் என்பதன் பொருள் இலவசம். எப்படியும் இதனை நீங்கள் புரிந்து கொண்டால் நல்லது.

இப்படியாக பிள்ளையின் 18 வயது அடையும் வரை வருடா வருடம் $400 வெள்ளிப்பணம் கிடைக்கின்றது. இதற்கு பெற்றோர்களின் குடும்ப வருமான நிலை கணக்கில் எடுக்கப்படுவது இல்லை.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு முதலாவது ஆண்டிலிருந்து வருடம் $2,000 வெள்ளிப் பணத்தினை சேமிக்க ஆரம்பித்தால் பிள்ளையின் 18வது வயதில் $7200 இனை இலவசமாக பெறுவதுடன் அதற்கான வட்டியும் அந்த நிதி நிறுவனங்களால் வழங்கப்படும்.

இதுவரையில் இங்கு குறிப்பிட்டது அடிப்படையான மானியம் 1998ம் ஆண்டு இந்த திட்டத்தினை அறிமுகப்படுத்திய போது இருந்த நிலை.

இன்று நாம் 2007ம் ஆண்டின் நடுப்பகுதியில் இக்கட்டுரை எழுதுகின்ற போது வருமானம் குறைந்த குடும்பத்தில் உள்ளவர்களை அரசாங்கம் கவனத்தில் கொண்டு பல மாற்றங்களை காலத்துக்கு காலம் மேற்கொண்டு வந்துள்ளது.

இந்த வகையில் பெற்றோர்களின் மொத்த வருமானம் $36,378க்கும் இடைப்பட்டதாக இருந்தால் முதலாவது $500 க்கு 30 சதவீதமும் மீதமுள்ள $1500 க்கு 20 சதவீதமுமாக வருடாந்த மானியமாக $450 பெறமுடியும்.

குடும்ப வருமானம் $72,756க்கு மேற்பட்டிருக்கும் நிலையில் வருடம் மானியமாக $400 வெள்ளிப் பணத்தினை பெற முடியும். இங்கு பெற்றோர்கள் 2,000 வெள்ளிப் பணத்தினை கல்விச் சேமிப்புத்திட்டத்தில் சேமிக்கின்றார்கள் என்கின்ற எடுகோளை கொண்டே இதனை உங்களுக்கு தெரியப்படுத்தியுள்ளோம்.

இதேபோன்று Canada Learning Bond என்னும் மானியம் பற்றி அடுத்த இதழில் பார்ப்போம்.





Jude
Anthonypillai LL.B. (Canada)
Barrister, Solicitor & Notary Public
Former Asst. Crown Attorney

Phone
416 332 8547

யூட் அந்தோனிப்பிள்ளை
கனடிய வழக்கறிஞர்
முன்னாள் அரச வழக்கறிஞர்

தொலைபேசி
416 332 8547

தொலைநகல்
416 332 8379

2390 Eglinton Ave. East
Suite 259
Scarborough ON
M1K 2P5

## ஹோமியோபதி என்றால்..

விரும்பத்தகாத மாற்றங்களைக் கொண்டுவர நோய் தீவிரமடைவதாகவோ பக்க விளைவுகள் ஏற்படுவதாகவோ தோன்ற வைக்கும்.
* அடிக்கடி மருந்தினை எடுத்தல் நீங்கள் எதிர்பார்த்ததைவிட எதிரான விளைவுகளைக் கொணர்தல்.
* மருந்தினை நிறுத்திய பின்னரும் அது தொழிற்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதை உணரல்.

ஹோமியோபதியின் நன்மைகள்
* பக்க விளைவுகள் அற்றவை. தீவிர மற்றும் நீண்டகால நோய்களுக்கும் திறமையானது, பாதுகாப்பானது.
* வளர்ப்புப் பிராணிகள் உட்பட முழுக் குடும்பத்துக்கும் உகந்தவை.
* ஒப்பீட்டளவில் மலிவானவையும் உடல், மன, உணர்வு, ஆன்மீக மட்டங்களில் செயற்படக்கூடியவை.
* (சமிபாட்டுத் தொகுதி மூலம் வழங்கப்படுவதைவிட) ஹோமியோபதி மருந்துகள் நாவின் கீழ் அதிகூடிய விரைவில் உட்சென்று சீக்கிரமாகத் தொழிற்படுகின்றன.
* அடிப்படையான நோய்க் காரணிக்குச் சிகிச்சையளித்து அதனைக் குணமாக்குகின்றது. உடலின் சமநிலையைச் சமச்சீர் செய்கின்றமையால் மருந்துகளில் தங்கியிருக்கும் தன்மை அற்றது.

உங்கள் ஆரோக்கியத்தை முன்னேற்ற தகுதி பெற்ற ஒரு ஹோமியோபதி வைத்தியரை அணுகி இம்முறையின் அதிசயங்களை அனுபவியுங்கள். பயிற்சி, சிகிச்சை, ஆய்வு போன்றவற்றிற்கான மேலதிக விபரங்களை www.belnahomeopahty.com இணையத்தளத்தில் பார்க்கலாம்.

---


## திறந்தவெளி அரங்கில்..

கணித ஆசிரியராகத் திகழ்ந்தார். வைரவிழாக் கட்டிடம் கட்டுவதாகவும் தீர்மானம் எடுத்தாச்சு. நாடக மூலம் சேகரிக்கப்பட்ட நிதியும் வைரவிழா நிதியத்தின் ஆரம்பமாகியது. ஆகவே பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் மூலமாக இதனை சட்டபூர்வமாக்கினோம். அதிபரைத் தலைவராகக் கொண்ட வைரவிழா நிதியத்திற்கான செயலாளராக நானும், பொருளாளராகத் திரு ஆ. இராமசாமியும் பொறுப்பேற்றோம். பொருளுதவிக்குப் பழைய மாணவர்களையும் வள்ளல்களையும் நாடினோம். நானும் அதிபரும் கொழும்பு நகருக்கு இரண்டு முறை சென்றிருந்தோம். மண் இரசாயன வல்லுனர் கலாநிதி கந்தையா அவர்களும், லீலா நிறுவனத்தின் அதிபர் சின்னத்துரை அவர்கள் கொழும்பில் பல பழைய மாணவர்களிடம் செல்வதற்கு உதவினர். மஹாகவி அவர்கள் வவுனியாவிலும் நல்லைநாதன் அவர்கள் மன்னாரிலும் பொறுப்பான பதவிகளில் இருந்தனர். தமது வாகனங்களைக் கொடுத்து பழைய மாணவர்களையும் பெற்றோர்களையும் சந்திப்பதற்காக உதவினர். உதவி மயிலங்கூடலூர் நடராசன் மட்டக்களப்பில் உதவினார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பல பழைய மாணவர்கள் ஆசிரிய குழாத்தில் இருந்தனர். நானும் முருகையாவும் இராமசாமியும் அங்கெல்லாம் சென்று பழைய மாணவர்களைக் கண்டு நிதி உதவி பெற்றோம்.

தேவையான நிதி சேகரிக்க முடியும் என்ற நம்பிக்கை இருந்தது.

வசதிக் கட்டணத்தையும் மிகவும் கவனமாகச் செலவு செய்தமையால் கணிசமான தொகை சேமிப்பிலும் இருந்தது. கல்லூரியில் வசதிக் கட்டணம் சேகரிப்பிற்குப பொறுப்பாக இருந்தவர் திரு கதிர்காமத்தம்பி அவர்கள் கல்லூரியின் பழைய மாணவர். கண்மணிக் கிளாக்கர் என எல்லோராலும் அன்பாக அழைக்கப்பட்டவர். முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர். மிகவும் நல்லவர் ஆனால் காசிலே கண்ணும் கருத்தாகவும் உள்ளவர். ஏதாயினும் செலவுக்கு அதிபர் உத்தரவு கொடுத்தாலும் இவரிடமிருந்து கறப்பது கல்லிலே நார் உரித்த மாதிரித்தான். இரவு வேளைகளில் கூட பாடசாலை வந்து எல்லா அறைகளும் ஒழுங்காகப் பூட்டியுள்ளனவா எனக் கவனித்துச் செல்லும் பண்பாளர். அவர் வருவதற்கு முன்னர் நிதிக்குப் பொறுப்பாளராக பிரம்மஸ்ரீ கார்த்திகேசு ஐயா அவர்கள் இருந்தார்கள். அவர்களும் மிகவும் கஞ்சத்தனமாகவே நிதியைச் செலவழித்தார்கள். ஆகவே தான் வசதிக்கட்டணச் சேமிப்பு பெருந்தொகையில் இருக்க முடிந்தது. இதனையும் அரசாங்கத்தின் உத்தரவினைப் பெற்று கட்டிடம் எழுப்புவதற்கு வேண்டிய தொகையினில் சேர்க்க முடியும் என நம்பிக்கை இருந்தது. திறைசேரியில் எமது பழைய மாணவர்கள் நல்ல பதவியில் இருந்தமையால் எமக்குப் பண உதவி புரிவோருக்கு வருமானவரிச் சலுகை அளிக்கலாம் என்ற அனுமதியையும் பெற முடிந்தது.

(தொடர்ந்து வரும்)



நக்கீரன்
தலைவர் - தமிழ்ப் படைப்பாளிகள் கழகம்

# என்றுமுள்ள செந்தமிழ் - 2

சென்ற இதழில் தமிழில் எவ்வாறு எமது முன்னோர் உருவத்தையும் பருவத்தையும் ஒரு சேரக் குறிப்பதற்குப் பொருத்தமான சொற்களை உருவாக்கியிருந்தார்கள் என்பதைப் பார்த்தோம். இவ்வாறான கலைச் சொல்லாக்கம் இடைக் காலத்தில் குறைந்தும் பிற்காலத்தில் முற்றாக ஒழிந்தும் போய்விட்டன. தற்காலத்தில் தான் இன்றைய அறிவியல், வானியல், பொருளியல், குமுகவியல் துறைகளில் கலைச்சொல்லாக்கம் மீள நடைபெற்று வருகிறது.

பிங்கல நிகண்டு 'இனிமையும் நீர்மையும் தமிழெனலாகும்' என தமிழுக்கு வரைவிலக்கணம் சொல்கிறது. நீர்மை என்ற சொல்லுக்கு பல பொருள் உண்டு. குளிர்மை (coolness) தன்மை (nature, property, inherent quality) சிறந்த குணம் (goodness, essential excellence) அழகு (beauty) ஒளி (brilliance, lustre) நிலைமை (state, condition) ஒப்புரவு (observance of proper rules or established custom) என மதுரைத் தமிழ் பேரகராதி (அகரமுதலி) பொருள் கூறுகிறது.

மூவேந்தர் ஆண்ட தமிழகத்தை 'வண்புகழ் மூவர் தண்பொழில்' எனத் தொல்காப்பியர் குறிப்பிடுவார்.

தமிழகம் வடக்கே வேங்கடம், தெற்கே குமரிமுனை, மேற்கிலும் கிழக்கிலும் கடல் ஆகியவற்றை எல்லைகளாகக் கொண்டிருந்தது. வட எல்லை வடபெருங்கல் (இமயம்) எனக் கூறும் இலக்கிய வழக்கும் இருந்தது. (புறம் 17)

தமிழில் இன்று கிடைக்கக் கூடிய பழமையான இலக்கண நூலான தொல்காப்பியம். தொல்காப்பியத்துக்குப் பாயிரம் எழுதிய பரம்பாரணார் தமிழக எல்லையைப் பின்வருமாறு குறிக்கிறார்.

வட வேங்கடம் தென்குமரி
ஆயிடைத்
தமிழ் கூறும் நல் உலகத்து
வழக்கும் செய்யுளும் ஆஇரு முதலின்
.....................................

சங்க காலத்தில் வேங்கட மலைக்கு அப்பால் வடுகு நாடு இருந்தது. அங்கு வாழ்ந்தவர்கள் வடுகர் என அழைக்கப்பட்டனர்.

பண்டைக் காலத்தில் திராவிடர்கள் நாவலந்தீவு (இந்தியா) முழுதும் செறிந்து வாழ்ந்தனர். இன்றும் திராவிட மொழி பேசுகிற மக்கள் வடக்கில் வாழ்கிறார்கள்.
உருசிய மொழிவல்லுனரான எம்.எஸ். அன்றொனொவ் (M.S.Andronov) என்பவர் தொடக்க திராவிட மொழி 21 வெவ்வேறு திராவிட மொழிகளது பிறப்புக்கு வித்திட்டதாகக் கூறுகிறார். அவை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்படலாம்.
1) வட பிரிவு
2) நடு பிரிவு
3) தென் பிரிவு

வட பிரிவில் மூன்று மொழிகளும நடுப்பிரிவில் பத்து மொழிகளும் தென் பிரிவில் நான்கு மொழிகளும் காணப்படுகின்றன.

வட பிரிவு மொழிகளில் ஒன்றான பிராகுய் (Brahui) மொழியை பாகிஸ்தான் (பாலுஸ்தான் மாநிலம்) ஆப்கனிஸ்தான், பாரசீகம் (இரான்) துர்க்மனிஸ்தான் (Turmenistan) போன்ற நாடுகளில் பேசப்படுகிறது. இவர்களது தொகை 2,000,000 என மதிப்பிடப்படுகிறது. பிறமொழிக் கலப்புக் காரணமாக பிராகுய் மொழி சிதைந்தும் அதனைப் பேசுவோர் தொகை குறைந்தும் வருகிறது. பிராகுய் மொழி பேசுவோர் வாழும் சூழலுக்கு ஏற்ப வட்டார மொழியையும் பேசுகிறார்கள்.

திராவிட மொழிகள் எனச் சொல்லும் போது பொதுவாக தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு போன்ற மொழிகளை மட்டும் குறிக்கும் வழக்கம் இருந்து வருகிறது. தெலுங்கு மொழி ஆதிதிராவிட மொழியில் இருந்து கிமு 500 ஆண்டுகளுக்கு முன் பிரிந்து தனிமொழியாகி விட்டது. கன்னடம் கிமு முதலாம் நூற்றாண்டில் பிரிந்து விட்டதாக நம்பப்படுகிறது.

தெலுங்குமொழி வரிவடிவத்துக்கும் கன்னடமொழி வரிவடிவத்துக்கும் நிறைய ஒற்றுமை காணப்படுகிறது. இரண்டையும் உடன்பிறப்பு மொழிகள் என்று கூறும் வழக்கம் இருக்கிறது.

தெலுங்கு - கன்னட மொழிகளில் தமிழ்ச் சொற்கள் பெருமளவு காணப்படுகிறது. மலையாள மொழி தமிழில் இருந்து கிபி ஒன்பதாம் நூற்றாண்டில் பிரிந்துவிட்டது. நம்பூதிரிப் பிராமணர்களது குடியேற்றமும் (கிபி 5-7ம் நூற்றாண்டு) வடமொழிக் கலப்புமே மலையாள மொழி தமிழில் இருந்து பிரிந்ததற்கு முக்கிய காரணிகளாகும். இன்றைய கேரளம் மூவேந்தர்களில் ஒருவராகச் சிறப்பிக்கப்படும் சேரர்களது நாடாகும். சேரநாடு கேரளமாகச் சிதைவுற்றது. அசோகன் நிறுவிய கல்வெட்டு சேரரை கேரள புத்திரர் என்றே குறிப்பிடுகிறது.

சிலப்பதிகாரம் படைத்த இளங்கோ சேர நாட்டவர். தமிழ்நாட்டில் கண்ணகிக்கு எழுப்பப்பட்டுள்ள ஒரே கோயில் கேரள - தமிழ்நாடு எல்லையில் - உத்தமபாளையம் வண்ணாத்திக் காட்டுப் பகுதியில் - உள்ள கொடுங்கலூர் என்னும் ஊரில் உள்ளது. இந்தக் கோயிலை சேரன் செங்குட்டுவன் கட்டியதாக நம்பப்படுகிறது. ஆண்டுதோறும் சித்திரை முழுநிலா (சித்ரா பவுர்ணமி) நாளில் சிறப்புப் பூசை வழிபாடு நடைபெறுகிறது. வடமொழிக் கலப்பால் சேரநாட்டுத் தமிழர்கள் தங்கள் தேசிய அடையாளத்தையும் மொழியையும் இழந்து விட்டார்கள்.

தமிழகத்தின் தெற்கு எல்லை கடலாக இருந்தது. இன்று அது மேற்குமலைத் தொடராக குறுகிவிட்டது. தமிழர்களது தொகை 3 1/2 கோடியாகக் குறைந்துவிட்டது. 1901 இல் தமிழீழத்தின் நிலப்பரப்பு 19,140 சகிமீ ஆக இருந்தது. 1901 ஆண்டு இலங்கையை ஒன்பது மாகாணங்களாகப் பிரித்த போது வடக்கு 8700 சகிமீ ஆகவும் (இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் 13 விழுக்காடு) கிழக்கு 10,440 சகிமீ (மொத்த நிலப்பரப்பில் 16 விழுக்காடு) ஆகவும் இருந்தது.

சுதந்திரத்தின் (1948) பின்னர் கிழக்கில் 7 ஆயிரம் சகிமீ நிலப்பரப்பும் வடக்கில் இருந்து 500 சகிமீ நிலப்பரப்பும் பக்கத்து சிங்கள மாகாணங்களோடு இணைக்கப்பட்டு விட்டது. தமிழர்களது கடலோர நிலப்பரப்பும் இன்று குறைந்துள்ளது.

சென்னையில் வாழும் தமிழர்கள் பலர் இந்தி, உருது, ஆங்கில மொழிச் சொற்களைக் கலந்து பேசுவதால் "மதராஸ் பாசை" என்ற ஒரு புதிய மொழியே தோன்றிவிட்டது. இந்த நாட்டம் தொடருமேயானால் ஒரு நூறு ஆண்டுகளுக்குப் பின்னர் சென்னை வேற்றுமொழி பேசும் மாநிலமாக மாறினாலும் மாறக்கூடும்.

மொழித் தூய்மை காப்பாற்றப்படாவிட்டால் - காப்பாற்றத் தவறினால் - தமிழ் கூறும் நல்லுலகம் சுருங்கிவிடும் என்பதை எடுத்துக்காட்டவே இந்தப் பின்னோட்டத்தை எழுத நேரிட்டது.

இயல் என்ற பின்னொட்டை வைத்து பல சொற்கள் ஆக்கப்பட்டுள்ளன. இலக்கிய - இலக்கணத்தில் ஆங்கிலத்தில் ism போலத் தமிழில் 'இயம்' இறுதி ஒட்டாய் வருவதைப் பரக்கப் பார்க்கலாம்.

எடுத்துக் காட்டாக தமிழியம், உலகியம், உயிரியம், மக்களியம், சால்பியம், அரசியம், சமனியம் (Socialism) ஒப்பியம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

(மறுபக்கம் வருக)

R&S Auto Sales

Top Quality Used Car Dealer

வங்கியால் உடமைப்படுத்தப்பட்ட
வாகனங்களை விற்பது
எங்கள் விசேட திறன்!

28 ஆண்டுகள் அனுபவம்!



RADHA

HONDA
TOYOTA
GM-MINI VANS



ON THE SPOT
FINANCING

4362 Sheppard Ave. East
at Brimley

Tel: 416 412 3838

## என்றுமுள்ள செந்தமிழ்..

படைப்பியம் படைப்புக்கலையை மட்டுமன்றி அதனை உள்ளடக்கிய அத்துறை சார்ந்த அனைத்தையும் குறிக்கப் பயன்படுத்தலாம்.

ஆங்கிலச் சொல்லான truth அல்லது correctness என்ற சொல்லுக்கு யதார்த்தம் என்ற வடமொழிச் சொல்லையே பலர் பயன்படுத்துகிறார்கள். "இதுவே இன்றைய யதார்த்தம்" என்று எழுதுவதற்கு ஈடாக "இதுவே இன்றைய நடப்பியம்" என எழுதலாம். ஒப்பியம் போல மிகப் பொருந்திய கலைச்சொல் வடிவம் பெறுகிறது.

இதே போல் நிரூபித்தல் என்ற வடமொழிச் சொல்லை நீக்கிவிட்டு "எண்பித்தல்" "மெய்ப்பித்தல்" என்ற சொற்களைப் பயன்படுத்தலாம். பயன்படுத்தும் போது மொழி தூய்மை அடைகிறது. சொல்வளமும் பொருள்வளமும் சேரும்போது தமிழ்வளம் பெருகும். தொடர்ந்த நம் முன்னோர் உருவத்தையும் பருவத்தையும் குறிக்க உருவாக்கிய கலைச் சொற்களைப் பார்ப்போம்.

பன்னிருபாட்டியல் என்ற நூல் ஆண்களுக்கு ஏழு பருவப் பெயர்களைக் குறிப்பிடுகிறது.

| | |
|---|---|
| பாலன் | ஆண் 7 அகவைக்குக் கீழ் |
| மீளி | ஆண் 10 அகவைக்குக் கீழ் |
| மறவோன் | ஆண் 14 அகவைக்குக் கீழ் |
| திறலோன் | ஆண் 15 அகவைக்குக் கீழ் |
| காளை | ஆண் 16 அகவைக்குக் கீழ் |
| விடலை | ஆண் 30 அகவைக்குக் கீழ் |
| முதுமகன் | ஆண் 40 அகவைக்குக் கீழ் |

ஆண்களின் பருவத்தை பின்வருமாறும் குறிக்கலாம்.

| | |
|---|---|
| பிள்ளை | ஆண் - குழந்தைப் பருவம் |
| சிறுவன் | ஆண் - பாலப் பருவம் |
| பையன் | ஆண் - பள்ளிப் பருவம் |
| காளை | ஆண் - காதற் பருவம் |
| தலைவன் | ஆண் - குடும்பப் பருவம் |
| முதியோன் | ஆண் - தளர்ச்சிப் பருவம் |
| கிழவன் | ஆண் - மூப்புப் பருவம் |

ஆங்கிலத்தில் ஆணைக் குறிக்க Man என்ற ஒரு சொல்லுத்தான் பயன்படுத்தப்படுகிறது. பருவத்தைக் குறிக்க Man என்ற சொல்லோடு Young, Old என்ற முன்னொட்டைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. (வளரும்)

## ஒன்ராறியோவில் பாடசாலைப் பேருந்துகள் பாதுகாப்பு அதிகரிப்பு

பாடசாலைப் பேருந்திலிருந்து பாதுகாப்பாக பாடசாலைச் சிறுவர்கள் கடந்து செல்வதற்கு இலகுவாக, வாகனத்தின் முன் வலதுபாகத்திலிருந்து பாதுகாப்பு கை போன்ற ஒரு பகுதி நீண்டு போதிய இடவசதி ஏற்படுத்துகின்றது. வாகன ஓட்டுனரின் பார்வைக்குட்பட்ட பகுதியில் சிறுவர்கள் காத்து நின்று அவரின் சமிக்ஜை கிடைத்தவுடன் பாதுகாப்பாக கடந்து செல்லலாம். இப்பகுதியை பழைய பேருந்துகளில் இணைக்க மக்கன்ரி அரசாங்கம் $2 மில்லியன் டாலர்களை வாகன உரிமையாளர்களுக்கு வழங்கவிருக்கின்றது. புதிய வாகனங்கள் இத்தகைய அமைப்புடனேயே அமைக்கப்பட வேண்டுமென்ற சட்டம் ஜனவரி 1ம் திகதி, 2005ம் ஆண்டிலிருந்து அமுலிலிருக்கின்றது. ஒன்ராறியோவில் 17,000 மஞ்சள் பாடசாலை பேருந்துகள் பாவனையில் இருக்கின்றன. இவற்றில் 6,000 இலிருந்து 8,000 வரையான பேருந்துகளில் புதிதாக இவை பொருத்தப்பட வேண்டியுள்ளன.

இப் பேருந்துகள் பாதுகாப்பு சம்பந்தமான சில தரவுகள்:

* கிட்டத்தட்ட 91 வீதம் முன் பம்பர் விபத்துகள் இந்த பாதுகாப்பான கடந்து செல்லும் கை இல்லாத போதே நடக்கின்றன.
* 70 வீதமான இறப்புகள், இப் பேருந்துகளில் ஏறும் போது, அல்லது இறங்கும் போதே நடந்துள்ளன. 1998ம் ஆண்டிலிருந்து 28 இறப்புகள் நடந்திருக்கின்றன.
* 2001ம் ஆண்டு அறிக்கையொன்றின் படி, 340 வாகன ஓட்டுனர்களின் கூற்றுப்படி, ஒவ்வொரு நாளும் மூன்றில் ஒரு வாகனம் இப் பேருந்துகளை சட்ட விதிகளுக்கு அமையாத வகையில் கடந்து செல்வதாக தெரிவித்துள்ளனர்.

# நாம் இருவர் - நமக்கு மூவர்

## புதிய தமிழ்த் தம்பதியினருக்கு 5000 டாலர்கள் ஊக்குவிப்புப் பணம்



புலம்பெயர்ந்தவர்களுக்கான தமிழர் தகவலின் சிறப்புத் திட்டம்

தமிழர் தகவல் சஞ்சிகை புலம்பெயர்ந்தவர்களுக்கான சமூக நலன் சார்ந்த புதிய திட்டமொன்றினை அறிமுகம் செய்வதில் மகிழ்ச்சி அடைகின்றது. எமது சமூகத்தில் குழந்தை பிறப்பு வீதம் வெகுவாகக் குறைந்து வருவதைக் கவனத்தில் எடுத்து இந்தத் திட்டத்தை உருவாக்கியுள்ளோம்.

ஒரு வரியில் இத்திட்டத்தைச் சொல்வதானால், '2005 ஜனவரி முதலாம் திகதிக்குப் பின்னர் சட்டப்படி திருமணம் புரிந்த/புரியும் தமிழ்த் தம்பதியினர், திருமணத் திகதியிலிருந்து வரும் ஆறு வருடங்களுக்குள் மூன்று குழந்தைக-ளைப் பெறுவார்களானால். அவர்கள் 5000 கனடிய டாலர்களை ஊக்குவிப்புப் பணமாகப் பெறுவர்'.

எத்தனை தம்பதியினருக்கு இந்த ஊக்குவிப்புப் பணம் வழங்கப்படும் என்ற கட்டுப்பாடில்லை. ஒவ்வொரு தம்பதியினருக்கும் தலா ஐயாயிரம் டாலர்கள் வழங்கப்படும். முதலாவது தம்பதியினருக்கான பணத்தை 'அகிலன் அசோஷியேற்ஸ்' நிறுவனம் வழங்க முன்வந்துள்ளது. யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவர் தலைவனாகவிருந்து அகால மரணமடைந்த எஸ். தி. அகிலன் ஞாபகார்த்தமாக இந்நிதி வழங்கப்படுகின்றது.

தமிழ்க் குழந்தைகள் ஊக்குவிப்புத் திட்டத்தின் முதற் கட்டம் 2010 டிசம்பர் 31ல் முடிவடையும். அதாவது, 2005 ஜனவரி 1 திகதிக்குப் பின்னர் திருமணமாகும் தம்பதியினர், அடுத்து வரும் ஆறு வருடங்களான 2010 டிசம்பர் 31க்கு முன்னர் எப்போது மூன்று குழந்தைகளைப் (ஒற்றைப் பிரசவங்களாக) பெறுகின்றனரோ, அப்போது தமக்கான 5000 டாலர்களைப் பெறுவார்கள்.

எங்கள் களத்திலும் புலத்திலும் (தாயகத்திலும் புகலிடத்திலும்) பிள்ளைகள் பிறப்பு வீதம் மிக அருகி வருகின்றது. புதிய தம்பதியர் ஒரு குழந்தையுடன் நிறுத்தி விடுகின்றனர். மறுபுறத்தில், திருமணமாகும் வயதும் பின்னோக்கிச் செல்கின்றது. அடுத்த பக்கத்தில், உள்நாட்டு யுத்தத்தினால் தமிழர் இறப்பு வீதம் ஓங்கிக்கொண்டிருக்கின்றது. கடந்த இரண்டு தசாப்தத்தில், அப்பாவி மக்களும் போராளிகளுமாக சுமார் ஒரு லட்சத்தை எட்டிப்பிடிக்கும் எம்மவர் மரணமாகியுள்ளனர். பத்து லட்சம் வரையானோர் புலம் பெயர்ந்துள்ளனர்.

ஒரு காலத்தில் ஒவ்வொரு தமிழர் குடும்பத்திலும் சராசரியாக 4 அல்லது 5 பிள்ளைகள் என்றிருந்த நிலை இன்று மாறிவிட்டது. ஒரு பிள்ளையைப் பெறுவதற்குக்கூட மூன்று-நான்கு வருடங்களைப் பின்போடும் தம்பதியினரையே இன்று கூடுதலாகக் காண்கின்றோம். இந்த நிலைமை. மாற்றம் பெற வேண்டும். தமிழர் சனத்தொகை கீழோங்கிச் செல்வதில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டியது காலத்தின் நியதி.

இந்தத் தகவலை உங்கள் நண்பர்கள் உறவினர்களிடம் எடுத்துச் சொல்லுங்கள். குழந்தைச் செல்வங்களின் அதிகரிப்பின் நோக்கத்தை அவர்களிடம் எடுத்துக் கூறுங்கள். இந்த ஊக்குவிப்புத் திட்டம் பற்றிய விபரமான விளக்கத்தை தமிழர் தகவல் பிரதம ஆசிரியர் திரு எஸ். திருச்செல்வத்துடன் தொடர்பு கொண்டு பெறலாம்.

இந்தத் திட்டம் ஒரு பொழுதுபோக்குப் போட்டியன்று. சமூக அக்கறையுள்ள பலர் கூடி எடுத்த முடிவின் வெளிப்பாடு. மற்றைய முன்னணித் தமிழ் ஊடகங்களிலும் இவ்விபரங்கள் வெளியிடப்படும். விரிவான விபரங்களைப் பெற 416 920 9250.


**P. Kayilasanathan**
B.A. (Cey) LLB (Cey)

**BARRISTER & SOLICITOR**



குற்றவியல் வழக்குகள், அகதிநிலை விசாரணைகள், மனிதாபிமான விண்ணப்பங்கள், வீடு, வியாபார ஸ்தாபனங்கள் வாங்குதல் - விற்றல், குடும்ப வழக்குகள், வாகன விபத்து நஷ்டஈடு கோருதல்.


**பொ. கயிலாசநாதன்**
கனடிய பரிஸ்டர்

2401 Eglinton Av. E. Suite #302
(Eglinton / Kennedy)
Scarborough ON M1R 2M5

**Tel: 416-752-9561**
**Fax: 416-752-7262**

# ஸ்ரீ கணேஷ துர்க்கா தேவஸ்தானம்

# SRI GANESHA DURGA HINDU TEMPLE OF MISSISSAUGA







**தொடர்புகளுக்கு:**

'ஸ்ரீ விஜயலெட்சுமி வாசா அதிபர்', 'சிவாகம கிரியா பூஷணம்'

## சிவஸ்ரீ. பஞ்சாட்சர கிருஷ்ணராஜ குருக்கள்

(ராஜன் குருக்கள்)

கனடிய திருமணப்பதிவு அதிகாரி, இந்துமதகுரு, புங்குடுதீவு - 10ஆம் வட்டாரம்
ஆலயப் பிரதமகுரு, ஆலய ஸ்தாபகர், முதல்வர் - அறங்காவலர் சபை

**7220 Tranmere Drive**
**Mississauga, ON. L5S 1L6**
**TEL: 905-405-0011 / 905-501-0011**

**www. sriganeshadurga.com**

**NLR ACCOUNTING AND TAX SOLUTIONS**

Personal Tax Returns
Corporate Tax Returns
Book-keeping
RST, GST, Payroll service

E-File
confidential
friendly and
fast service

Phone
**416 888 1128**
**416 492 7973**

Location

2525 Pharmacy Av.
Pharmacy Av & Finch Av. East
(Inside Universal Textiles)

NLR

## புற்றுநோயை விரட்டும் கறிவேப்பிலை

இந்திய சமையலில் வாசனைக்கு சேர்க்கப்படும் மாசாலாப் பொருளான கறிவேப்பிலை புற்றுநோயை ஆரம்பத்திலேயே கொல்லும் ஆற்றல் உடையது என்பதை அண்மையில் ஆஸ்திரேலிய உணவியல் அறிஞர்கள் கண்டறிந்துள்ளனர்.

நியூட்ரிஷன் சயின்டிஸ்ட் ஆஃப் கிரஸ்ரோ என்பது ஆஸ்திரேலியாவின் மிகப்பெரிய ஆராய்ச்சி நிறுவனம். அவற்றின் தலைவர் லனே கோபியா தலைமையில் மசாலாப் பொருட்கள் பற்றி ஆராய்ச்சி நடந்தது. அதில் கறிவேப்பிலையிலுள்ள இரசாயனப் பொருட்கள் புற்றுநோய், இதய நோய்களைக் குறைக்கும் ஆற்றல் உடையது என்பது தெரிய வந்தது. மேலும் ஞாபக சக்தியை பெருக்கும் சக்தியும் உடையது என்பது தெரியவந்தது.

## நீரிழிவு வியாதிக்கான மருந்தே பிரச்சனையாகலாம்!

நீரிழிவு நோய்க்காக அதிகளவில் பயன்படுத்தப்படும் அவன்டா (Avanda) எனும் மருந்து இருதய நோய்/மாரடைப்பு அல்லது மரணத்தைக் கூட ஏற்படுத்தும் பெரும் அபாயம் நிறைந்ததாக காணப்படுகிறது என புதிய ஆய்வொன்று தெரிவிக்கின்றது.

நீரிழிவு நோயின் பொதுவான வகையான Type II இற்கு இம்மருந்து பாவிக்கப்படுகின்றது. உலகளவில், கனடா நோயாளர்கள் உட்பட ஆறு மில்லியனுக்கும் அதிகமானவர்கள், 8 வருடங்களுக்கு முன் சந்தைப்படுத்தப்பட்ட GlaxoSmithKline மருந்தை பாவித்துள்ளார்கள்.

பல ஆய்வுகளின் கூட்டு முடிவு 45 வீதமானவர்களுக்கு இருதய நோய் (Heart attack) வருவதற்கான பெரிய அபாயம் இருப்பதாக தெரிவித்திருப்பதை, New England Journal of Medicine எனும் மருத்துவ சஞ்சிகை வெளியிட்டுள்ளது.

மொத்தமாக பார்க்கையில் இதனால் ஏற்படும் அபாயம் குறைவென்றும் நோயாளர்களை தாமாக இம்மருந்தை நிறுத்த வேண்டாமென்றும், குடும்ப வைத்தியரை கலந்தாலோசிக்குமாறும் நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.



"ஆசை, ஆசை இப்பொழுது
பேராசை இப்பொழுது
ஆசை தீரும் காலம் எப்பொழுது?"

**வீடு வாங்கும் உங்கள்
ஆசைகளை நிஜங்களாக்கிவிட
இன்றே அழையுங்கள்...**

**"Honesty, Integrity, Professionalism"**

**சாள்ஸ் தேவசகாயம் M.A**
Sales Representative
**Direct: 416-284-5555**
24Hrs: 416-284-4751
880 Ellesmere Rd., Suite 203
Scarborough. Ont. M1P 2W6

ROYAL LEPAGE
Connect Realty, Brokerage
INDEPENDENTLY OWNED AND OPREATED



• Loans • Mortgages • Insurance Claims • Traffic Tickets •

Scholarship Plan [RESP]

Any Referral Service

JRB Universal Inc.

Almost All Services Available

B: 416 752 7555
C: 416 937 9081



R.R. Rajkumar
B.Com (Hons), M.B.A.

• Credit Counseling • Accounting & Tax Services •

# ஆலய சன்னிதானங்களில்

## கனடா றிச்மன்ட்ஹில் இந்து ஆலயம்

வடஅமெரிக்காவின் 'பெரிய கோயில்' என அழைக்கப்பெறும் றிச்மன்ட்ஹில் ஆலயம் திங்கட்கிழமையிலிருந்து வியாழக்கிமை வரையும் காலை 8:00 மணி முதல், பகல் 1:30 மணி வரையும், பின்னர் பிற்பகல் 5:30 மணியிலிருந்து இரவு 9:00 மஸி வரையும் திறந்திருக்கும். வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளிலும் மற்றும் விடுமுறை தினங்களிலும் காலை எட்டு மணி தொடக்கம் இரவு ஒன்பது மணி வரையும் திறந்திருக்கும். இரவு 9:30 மணிக்கு ஆலயம் மூடப்படும். ஆலய நிகழ்ச்சிகள் பற்றிய மேலதிக விபரங்களுக்கு ஆலயத்துடன் 905 883 9109 தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளலாம்.

## மிசிசாகா ஸ்ரீகணேச துர்க்கா ஆலயம்

மிசிசாகா 7220 Trammere Driveல் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள ஸ்ரீகணேச துர்க்கா இந்து ஆலயத்தில் தினசரி மூன்று காலப் பூஜைகளும் சிறப்பாக இடம்பெற்று வருகின்றது. செவ்வாய்க்கிழமைகளிலும் வெள்ளி முதல் ஞாயிற்றுக்கிழமைகளிலும் சிறப்பு பூஜைகள் நடைபெறுகின்றன. கிரியா வழிபாடுகளாலும், திருமணச் சடங்குகளாலும் வடஅமெரிக்கா முழுவதும் நன்கு பிரபல்யமான சிவஸ்ரீ பஞ்சாட்சர கிருஷ்ணராஜ குருக்கள் (ராஜன் ஐயா) அவர்களே இந்த ஆலயத்தை நிறுவியுள்ளார். இதன் பிரதம குருக்களும், அறங்காவல் சபையின் முதல்வரும் இவரே. ஆலய தொலைபேசி இலக்கம் 905 405 0011. ஸ்ரீவிஜயலட்சுமி வாசாவின் தொலைபேசி இலக்கம் 905 501 0011.

## ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலயம்

ஸ்காபரோ கென்னடி வீதியில் 3025ம் இலக்கக் கட்டிடத்தில் யுனிட் இலக்கம் 10 இல் (பிஞ்ச் வீதிக்கும் மக்னிக்கல் வீதிக்கும் இடையில், சன் பிளவர் பேணிச்சர் நிறுவனத்துக்கு முன்னால்) ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலயம் அமைந்துள்ளது. ஆலயத்தில் தினசரிப் பூஜைகளுடன், முக்கிய தினங்களில் விசேட வழிபாடுகளும் இடம்பெறுகின்றன. வாராந்தம் வெள்ளிக்கிழமைகளில் இரவுப் பூஜையின் பின்னர் சுவாமி உள்வீதி வலம் வருதல் இடம்பெறுகின்றது. ஆலயத்தின் வழமையான மற்றும் சிறப்பு நிகழ்ச்சிகள் உட்பட்ட மேலதிக விபரங்களுக்கு ஆலயத்துடன் 416 291 8500 இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும்.

நான் ஒரு
வழக்கறிஞர்
இல்லை

Motor Vehicle Accident
Criminal
வாகன விபத்து!
கிறிமினல்!

உங்கள் கணிப்பு தவறாகலாம்..
உரிய



சட்ட
ஆலோசனைகளுக்கு
கலகலப்பு தீசன்
416-803-5296
WWW.KALAKALAPPU.NET


கனடியத் தமிழ் வானொலி வழங்கும்
நட்சத்திரத் திருவிழா
CTR
2007
யூலை
07
யூலை
08
MARKHAM FAIR
10801 McCowan Rd,
Markham ON.
19th Ave.
MARKHAM FAIR GROUNDS
Elgin Mills Road E.
Mc Cowan Rd.
48
Major Mackenzie Dr. E.
16 th Ave.
தொலைபேசி
416.264.8798
www.ctr24.com
CTR
நட்சத்திரத் திருவிழா
2007

**The Children's Education Trust of Canada**
**offered to the public by**

**Children's Education Funds Inc.**



10 டாலரிலிருந்து ஆரம்பித்து
7200 டாலர்கள் வரை
கனடா அரசாங்கம் வழங்கும்
நன்கொடையைப் பெற்று
(20 வீத Grant)
உங்கள் பிள்ளைகளதும்
பேரப்பிள்ளைகளதும்
கல்வி வாய்ப்பை
ஊக்குவியுங்கள்.

**சமூக நம்பிக்கையையும்**
**நன்மதிப்பையும் பெற்ற**


சிவா
கணபதிப்பிள்ளை

**அவர்களை அழைத்து**
**விபரங்களைப் பெறுக!**

Siva Kanapathypillai
Branch Manager

416 438 0660, 416 438 3578
416 899 6044
இல்லத் தொலைபேசி:
905 472 1139
email
s.kanapathypillai@cefi.ca


# ஜனநாயகத்தின் மீதான நம்பிக்கையும் மதிப்பும் போய்க் கொண்டிருக்கின்றது



தீராநதி (குமுதம்) இதழின் 2007 ஜுன் 01 இதழில், பிரசித்திபெற்ற எழுத்தாளர் அ. முத்துலிங்கம் அவர்களின் பல்துறை சார்ந்த நீண்ட செவ்வியொன்று வெளியாகியிருந்தது. இதில், இலங்கை அரசியல் பற்றி எழுப்பப்பட்ட கேள்வியும், அவர் வழங்கிய பதிலும் நன்றியுடன் கீழே மறுபிரசுரம் செய்யப்படுகின்றது.

**தீராநதி:** அரசியல் தன்மையற்ற ஒரு நபராகவே நீங்கள் இருக்கிறீர்கள். இலங்கை அரசியல் நெருக்கடி குறித்தெல்லாம் ஏதாவது கருத்துக்கள் உங்களிடம் உள்ளனவா. மறுக்காமல் பேசுங்கள்?

**அ.முத்துலிங்கம்:** எதைச் சொல்கிறீர்கள்? என் சிறுகதைகள் ஏன் அரசியல் பின்னணி இல்லாமல் இருக்கின்றன என்று கேட்கிறீர்களா? இலங்கைப் பின்னணியில் நேர்த்தியான நாவல்கள், சிறுகதைகள், கவிதைகள் எல்லாம் வந்துகொண்டே இருக்கின்றன. நேரடி அனுபவம் இல்லாததால் நான் ஆழமாகப் பதிவு செய்ய முடிவதில்லை. ஆனால், என்னுடைய எத்தனையோ சிறுகதைகளில் ஈழத்து காட்சிகள் வந்து வந்து போகும். புதுமைப்பித்தன் சுதந்திரப் போராட்டத்தைப் பற்றி எழுதவில்லை. எமிலி டிக்கின்ஸன், அமெரிக்க உள்நாட்டுப் போர் பற்றி அவர் எழுதிய 1700 கவிதைகளில் ஒன்றில்கூட எழுதவில்லை. அதற்காக அவர்கள் அதுபற்றிக் கவலைப்படவில்லை என்று ஆகிவிடுமா?

பல நாடுகளில் சிறுபான்மையினரைப் பாதுகாக்க சட்டம் இயற்றுவார்கள். ஆனால் உலகிலேயே ஒரு பெரும்பான்மையைப் பாதுகாக்க சட்டம் கொண்டு வந்த நாடு இலங்கையாகத்தான் இருக்கும். இங்கே எப்படி ஜனநாயகம் வெற்றிபெறும் என்று எதிர்பார்க்கலாம். ஜனநாயகத்தில் எனக்கு நம்பிக்கையும் மதிப்பும் போய்க் கொண்டிருக்கறது. பெரும்பான்மை வைத்தது தான் சட்டம் என்று ஆகிவிட்டது. அவர்கள் போனால் போகட்டும் என்று விட்டுக் கொடுப்பது தான் நீதி? பெரும்பான்மை உள்ள ஒரு நாட்டில் ஜனநாயகம் இருக்க வேண்டும் என்றால், சிறுபான்மைக்குப் பாதுகாப்பு அரசியல் சட்டத்திலேயே ஐயத்துக்கு இடமில்லாமல் சொல்லப்பட்டிருக்க வேண்டும். அல்லாவிடில் சிறுபான்மைக்கு விமோசனமே கிடையாது. பேச்சு வார்த்தைகள் நடந்தபோது 'தீர்வு வந்துவிடும், தீர்வு வந்துவிடும்' என்று உலகம் எதிர்பார்த்தது. மறுபடியும் போர் என்றால் இழப்பு இரண்டு பக்கமும் தான். உலகிலே எத்தனையோ பாரிய பிரச்சனைகள். ஈராக், பாலஸ்தீனம், சூடான். யார் இலங்கைப் பிரச்சனையை கவனிக்கிறார்கள். எல்லோருமே கைவிட்டுவிட்டார்கள். தீர்வை அவர்களாகத்தான் தேட வேண்டும்.

## குளியல்: உன்னையே நீ அறியும் இடம்!



மனிதன் குளிக்காமல் வாழ முடியாதா?
குளிப்பது அவ்வளவு அவசியமா?

குளித்தல் என்பது உடம்பு கழுவும் ஏற்பாடு மட்டும்தானா?
அது தண்ணீர் தியானம்; தன்னைத் தானறியும் தவம்.
சிறுபொழுதடையும் ஜீவசமாதி அது. அதில் மறத்தல் இருக்கிறது.
தன்னுடலைத் தானே சோதிக்கும் மருத்துவம் இருக்கிறது.

வளைந்து முதுகு தேய்க்கும் வரைக்கும், குனிந்து பாதம் தேய்க்கும் வரைக்கும், உட்கார்ந்து குளிக்க உபகரணம் தேடாதவரைக்கும் உங்கள் உடம்பு உங்கள் கட்டுப்பாட்டில் என்று அர்த்தம்.

உடம்பு தேய்த்தல் என்ற உடற்பயிற்சியில் ரத்த ஓட்டத்தைச் சீர் செய்யும் சிறு முயற்சியும் இருக்கிறது. உடம்பின் எல்லா பாகங்களுக்கும் ஒரே மாதிரியான தேய்ப்பு இல்லை. உறுப்புகள் ஒவ்வொன்றும் வெவ்வேறு ஸ்பரிசங்கள் வேண்டுகின்றன. எங்கே அழுத்தம், எங்கே மென்மை என்ற சுயகட்டுப்பாடு போதிக்கும் வகுப்பு குளிப்பு.

குளித்தலுக்கு நேரம் ஒதுக்குங்கள்.

அங்குதான் நீங்கள் நீங்களாக இருக்கிறீர்கள்.

(சொன்னவர்; கவியரசர் வைரமுத்து)

# DR. ILLANGO & ASSOCIATES

*Dental Office*

BRACE FOR A GREAT SMILE

DR. ILLANGO & ASSOCIATES

பல் சிகிச்சையில் சகல துறைகளிலும்
எமது சேவை

## DR. M. ILLANGO

B.D.S. Dip.Orth (Oslo).General Practioner Mainly Orthodontics
கிளிப் போடும் வேலை

## DR. MEHRAN MOJGANI

D.D.S. Dip. Perio.Gum Specialist
பல்முரசு வைத்திய நிபுணர்

## DR. SABAPATHY RAVEENDRAN

B.D.S,M.S,F.D.SR.C.S (Eng), General Practioner (Mainly Oral Surgery)
(அறுவைச் சிகிச்சையில் இலங்கையிலும் இங்கிலாந்திலும் நிபுணத்துவம் பெற்ற பல்வைத்தியர்)

## DR. ALI ADIPBFAR


D.D.S,M.D,F.R.C.D (C), Plastic Surgeon
(Wisdom tooth extraction under sedation)
மயக்கமாக்கி ஞானப்பற்கள் அகற்றுபவர்

## DR. JANAKI ILLANGO


B.D.S. குடும்ப பல் வைத்தியர்

## Dr. LAI YUNG CHEONG

B.D.S. குடும்ப பல் வைத்தியர்




**SCARBOROUGH OFFICE**
3852 Finch Ave. East, Units 204, 303
Scarborough, ON
**(416) 292-7004**




**MISSISSAUGA OFFICE**
3025 Hurontario St., # 102
Mississauga, ON
**(905) 270-7844**

ISSN 1206-0585


ஓம்

# ஸ்ரீகௌரி மங்கள சேவை



அனைத்து இந்து மத கிரியைகளுக்கும்
கனடிய திருமண பதிவு அதிகாரி, இந்து மதகுரு

**சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமார குருக்கள்**

(ஐயாமணி) புங்குடுதீவு-10
ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலய பிரதம குரு

திருமணம், திருமணப் பதிவு
புதுமனை புகுதல்
கடை திறப்பு வைபவம்
புண்யாக வாசனம்
பூப்புனித நீராட்டு விழா
பூமாலை, ஆண்டாள் மாலை
சடை நாகம்
தலை நகை முழுவதும்
முத்து மணவறை

தலைப்பாகை
பந்தல் அலங்காரம்
கல்யாண பூசைப் பொருட்கள்
முத்துச் சப்பரம்
ஆலயத் திருவிழா
ஆலய வைபவங்கள்
ஆகிய அனைத்துக்கும்
எப்போதும் எம்முடன்
தொடர்பு கொள்ளுங்கள்

**416-266-3333**

628 E Birchmount Road
Scarborough, Ontario. M1K 1P9

ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலய தொலைபேசி இலக்கம் 416-291-8500

# NKS Draperies & Blinds

**210 Silver Star Road, Unit. 825**
**(Midland & Finch) Scarborough, ON**
**416 321 6420**





- Vertical blinds
- Venetian blinds
- Draperies
- Curtains
- Shutters

உங்கள்
இல்லங்களை
மாளிகையாக்கிட

அழையுங்கள்
**கேதா**

தமது சிறப்பான சேவையினால்
தகுந்த விருதுகளைப் பெற்ற நிறுவனம்